பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 18 | ஞாயிற்றுக்கிழமை (01.06.2003) | தொலைபேசி - 2223678 | ஒலி 164

உலகவலம் உங்கள் விரல் நுனிகளுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P. : 021-2222670, 2223588
FAX: 2223214
E mail-(el-smskr@eureka.lk

அபிவிருத்திக் கவுன்சில் நிராகரிப்பு

புதிய மாற்றுத் திட்டத்தை தயாரிக்க பிரதமர் முயற்சி

இரண்டொரு தினங்களில் புலிகளுக்கு அனுப்பப்படும்

(நமது நிருபர்)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவினால் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட "அபிவிருத்திக் கவுன்சில்" யோசனையை விடுதலைப்புலிகள் நிராகரித்ததையடுத்து மற்றுமொரு மாற்றுத் திட்டமொன்றை விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதற்காக அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுடனும் சமாதான செயலக உயர் அதிகாரிகளுடனும் அவசர சந்திப்பொன்றை பிரதமர் இன்று நடத்தவுள்ளார்.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும், அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் பங்கு கொள்வதற்கும் ஏற்றவகையில் அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்ட அதிகாரங்கள் நிறைந்த இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று விடுதலைப்புலிகள் அரசாங்கத்தை கோரியிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் இக் கோரிக்கையைப் பரிசீலனை செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, வடக்கு கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளைக் கவனிப்பதற்கு ''அபிவிருத்தி கவுன்சில் ஒன்றை நிறுவலாமென்ற பதிலுடன் கடிதம் ஒன்றை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்திருந்தார். இக் கடிதம் விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து நேற்று அவசர அவசரமாக முக்கிய அமைச்சர்களுடன் பிரதமர் ஆலோசனை நடத்தினார். அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் நேற்று நாடு திரும்பியதை அடுத்து இன்று அவர்களைச் சந்தித்து பிரதமர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், அரசின் சமாதான செயலணியின் ஆலோசகர்கள் எனப் பலதரப்பட்டோருடன் கலந்துரையாடிய பின் இன்னமும் இரண்டொரு தினங்களில் புதிய மாற்றுத் திட்ட யோசனைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப்புலிகளுக்கு அனுப்பவுள்ளார்.

இது இவ்வாறிருக்க, விடுதலைப் புலிகளுடனான உறவு முறிந்து போகாமல் இருப்பதற்காக நோர்வே உதவியை நாடவிருப்பதாகவும், விடுதலைப்புலிகளினால் அனுப்பி வைக்கப்பட்ட நிராகரிப்பு கடிதத்தில் டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்றுவது

(10ம் பக்கம் பார்க்க)

வெட்டுக் காயங்களுடன் சடலம் நீர்வேலிக் கிணற்றில் மீட்பு

(நீர்வேலி)

நீர்வேலி மேற்குப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டுக் காயங்களுடன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி கரந்தன் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் சிவபாதம் (வயது 49) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

நேற்று முன்தினமிரவு 8மணியளவில் கோப்பாய்க்குச் சென்று வருவதாகக் கூறி வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுச் சென்ற பிரஸ்தாப குடும்பஸ்தர் நேற்றுக் காலை வரை வீடு திரும்பவில்லை. இதனால் உறவினர்கள் அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதன்போது நேற்று மு.ப. 11மணியளவில் நீர்வேலி கரந்தன் வீதியில் மோட்டார் சைக்கிளுக்குரிய வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பன காணப்பட்டதையடுத்து அருகில் உள்ள கிணற்றை எட்டிப் பார்த்தனர்.

கிணற்று நீர் இரத்தத்தால் நிறைந்து காணப்பட்டது. இதனால்

(10ம் பக்கம் பார்க்க)

வல்வெட்டித்துறையில்

படைமுகாம் அமைப்பதை எதிர்த்து இன்று மறியல்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்திற்கு அருகில் இராணுவத்தினர் பாரிய முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் நேற்று முதல் ஈடுபட்டுவருகின்றனர்.

படையினர் முகாம் அமைக்கும் நடவடிக்கையைக் கண்டித்தும் முகாம் அமைக்கும் முயற்சியை கைவிடுமாறும் கோரி இன்று காலை மாபெரும் மறியல் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 10.30மணிக்கு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வரும் பகுதியில் இம்மறியற் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இம் மறியற் போராட்டத்தில் அப் பகுதிப் பொதுமக்களையும் கடற்றொழிலாளர்களையும் அணி திரளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

(த-63)

படையினரின் செயலுக்கு புலிகள் கடும் கண்டனம்

கண்காணிப்புக் குழுவிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தினுள் படையினர் அத்து மீறிச் சென்று கண்காணிப்புக் குழுவினருடன் இணைந்து சோதனை நடவடிக்கை மேற்கொண்டமை தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் நேரில் சென்று தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்குச் சென்ற இளம்பரிதி அங்கு கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒலே பிரண்டமிடம் தமது கண்டனத்தை நேரில் வெளியிட்டதுடன், இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை கண்காணிப்புக் குழு எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுத் தலைவர் இவ்வாறான செயல்கள் இனிமேல் இடம்பெறாது பார்த்துக் கொள்வதாக உறுதியளித்துள்ளார். (த)

வடமராட்சிக் கடற்பரப்பில் 3 கடற்படையினரை காணவில்லை

மண்டைதீவுக் கடலில் இரு சடலங்கள் கரையொதுங்கின

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற் பிரதேசத்தில் கடற்படை மாலுமிகள் மூவர் நேற்று முன்தினம் பிற்பகல் முதல் காணாமல் போயுள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து மணல்காடு நோக்கி இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட படகில் சென்ற சமயமே இவர்கள் காணாமல் போயுள்ளார்கள்.

காணாமல்போன கடற்படையினரை தேடும் பணியில் விமானப் படையின் உதவியுடன் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றபோதிலும் அவர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

தலைமையில் இருந்து ஏன் விலக வேண்டும்?

மத்திய குழு உறுப்பினர்களிடம் விளக்கம் கேட்கிறார் சங்கரி

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து ஏன் விலகவேண்டும் எனக் கோரி கூட்டணியின் 36 மத்திய உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பதவியில் இருந்து இராஜிநாமாச் செய்யுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தவிர்ந்த கூட்டணியின் செயலாளர் நாயகம் உள்ளிட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீ. ஆனந்தசங்கரியை சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

இவர்களின் கோரிக்கையை அடுத்தே வீ. ஆனந்தசங்கரி 7 பக்கங்களைக் கொண்ட கடிதம் ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணியின் 36 மத்திய குழு உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தில் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ஏன் விலக வேண்டும் எனக் கேள்வி எழுப்பி

(10ம் பக்கம் பார்க்க)

தாயுடன் மனக்கசப்பு தனயன் கழுத்தில் சுருக்கு

தக்க சமயத்தில் காப்பாற்றினார் தந்தை

(யாழ்ப்பாணம்)

தாயுடன் ஏற்பட்ட மனத்தாங்கலினால் விரக்தி அடைந்த மகன் தற்கொலை செய்யும் நோக்கில் வீட்டு வளையில் சுருக்கு மாட்டி தொங்கியவேளை தந்தையினால் மீட்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த க. கணேசலிங்கம் (வயது 23) என்ற இளைஞனே ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனு

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

78 இந்து நிறுவனங்களுக்கு இன்று காசோலை கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள இந்து நிறுவனங்கள் மற்றும் ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்கான நிதியை இந்து சமயவிவகார அலுவல்கள் அமைச்சு இன்று காசோலையாக வழங்கவுள்ளது

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரின் இல்லத்தில் காலை 7மணி முதல் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் 78இந்து நிறுவனங்கள் மற்றும் ஆலயங்கள் காசோலையைப் பெற்றுக் கொள்ளவுள்ளன.

மேற்படி நிதியைப் பெறவுள்ள இந்து நிறுவனங்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

சிறப்பனை முருகன் ஆலயப் பரிபாலனசபை (500,000.00), ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி, வேலணை தெற்கு, தாழையம்பதி (50,000.00), நயினை-தம்பகைப்பதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் சமேத ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலயம் (50,000.00), செட்டிப்புலம் ஐயனார் கோவில், வேலணை (25,000.00) அல்லைப்பிட்டி கரண்டப்பாய் ஸ்ரீ முருகன் ஆலயம் (50,000.00), நயினாதீவு ஸ்ரீ காளியம்மன் கோவில் (50,000.00) மண்டைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் (50,000.00), மலையில் நாயனார் ஐயனார் தேவஸ்தானம், நயினாதீவு (50,000.00), அம்பிகை நகர் ஸ்ரீ மகேஸ்வரி அம்மன் ஆலயம், வேலணை (25,000.00), நயினாதீவு பெருங்குளம் ஸ்ரீமதுரை மீனாட்சி அம்மன் கோவில், நயினாதீவு (50,000.00), மூத்தநாயனார் குளம் வரசித்தி விநாயகர் ஆலயம், புங்குடுதீவு(25,000.00) அல்லை சிவன் ஆலயம் (50,000.00) வங்களாவடி முருகன் ஆலயம் (50,000.00), ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், மண்கும்பான்(25,000.00), கலட்டி ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம், புங்குடுதீவு(50,000.00) நயினாதீவு ஸ்ரீகாட்டுக்கந்தசுவாமி கோவில் (50,000.00), அல்லைப்பிட்டி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம்(50,000.00),புனித பிலிப் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அல்லைப்பிட்டி (200,000.00), வாகீசர் சனசமூக நிலையம், அல்லைப்பிட்டி(50,000.00) வடஇலங்கை சர்வோதயம், புங்குடுதீவு 200,000.00) நயினாதீவு ஸ்ரீநாகபூஷிணி அமுதசுரபி அன்னதான சபை (200,000.00), முகப்புவயல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், மண்டைதீவு(50,000.00), குறிஞ்சாக்குளி முத்துமாரியம்மன் ஆலயம், காரைநகர் (100,000.00), ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், தம்பாட்டி (50,000.00),காரைநகர் மல்லிகை சேவகர் பெருமான் ஆலயம் (50,000.00), பிள்ளையார் கோவில், கரப்பிட்டியந்தனை, களபூமி (150,000.00) ஸ்ரீஞானவைரவர் ஆலயம், நாரந்தனை கிழக்கு (25,000.00), நாகபூஷணி அம்பாள் ஆலயம், காரைநகர் (100,000.00), மடத்துக்கரை முத்துமாரியம்பாள் ஆலயம், காரைநகர் (50,000.00),வியாவில் ஐயனார் கோவில்,காரைநகர்(900,000.00), ஊரி இளந்தென்றல் விளையாட்டுக்கழகம், களபூமி (75,000.00), கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலை, பருத்தியடைப்பு(25,000.00), ஒளிச்சுடர் இளைஞர் கழகம், காரைநகர் (50,000.00) திக்கரை முருகன் ஆலயம், களபூமி (150,000.00) கணபதீஸ்வரம் சிவன் கோவில் ஊர்காவற்றுறை (75,000.00) காரைநகர் இ.போ.ச.இந்து ஊழியர் சங்கம் (50,000.00) சிவகாமி அம்பிகை சமேத ஸ்ரீசிதம்பரேஸ்வரா தேவஸ்தானம், காரைநகர் (100,000.00), காரைநகர் ஊரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் (50,000.00), இந்து இளைஞர் மன்றம், புளியங்கூடல்(50,000.00), உதவி அரசாங்க அதிபர்(சைவ மகா சபை), காரைநகர் (350,000.00), அராலித்துறை மதவடி பத்திரகாளி சமேத வீரபத்திர ஆலயம் (50,000.00), வட்டுக்கோட்டை சின்னக்கதிர்காமம் தேவஸ்தானம் (50,000.00), ஞான வைரவர் ஆலயம், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை(50,000.00), வைரவர் பெருமான் தேவஸ்தானம், வட்டு. தென்மேற்கு(50,000.00), அளவெட்டி கிழக்கு வெள்ளியம்பதி ஸ்ரீகாளி அம்பாள் ஆலயம்(50,000.00), வாரி வனநாதர் சிவன் கோவில், சாவகச்சேரி(50,000.000) ஸ்ரீசரஸ்வதி அம்பாள்ஆலயம்,அரியாழை(50,000.00), கைதடி கயற்ற சிட்டி கந்தசுவாமி தேவஸ்தானம் (50,000. 00) கோகிலாக்கண்டி திருமூலே ஸ்வரி சமேத திருமூலேஸ்வரர் தேவஸ்தானம்(50,000.00), பொன் னன் கூடல் குத்துவைரவர் முனியப்பர் ஆலயம், கைதடி (50,000.00), கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீமகா முத்துமாரியம்மன் கோவில் (50,000.00),வண்மேற்கு ஸ்ரீஅங்குசபாச பிள்ளையார் தேவஸ்தானம், யாழ்ப்பாணம் (50,000.00), விஸ்வலிங்க மகா கணபதி கோவினது துவாதசி மடம், யாழ்ப்பாணம் (50,000.00), துர்க்கை அம்மன் ஆலயம், யாழ்ப்பாணம் (50,000.00), முடிமன்னர் வைரவர் ஆலயம் யாழ்ப்பாணம், தேசிய கல்வியற் கல்லூரி (200,000. 00), ஸ்ரீபழனிஆண்டவர் கோவில், கொழும்புத்துறை(50,000.00), தில்லைகாளி அம்பாள் தேவஸ்தானம் (50,000.00) வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம் (100,000.00), சித்துப் பாத்தி நிர்வாகக் குழு (100,000.00), இளைஞர் கழகங்களின் மாவட்ட சம்மேளனம் யாழ்.மாவட்டம்(25,000.00), ஸ்ரார் சனசமூக நிலையம், கொட்டடி(100,000.00), யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங் கம் யாழ்ப்பாணம்(50,000.00), உடற்கல்வி மாணவர் மன்றம் யாழ் பல்கலைக்கழகம்(20,000.00), கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்(100,000.00), கலைவாணி சனசமூக நிலையம், நாவாந்துறை(200,000.00), அண்ணா சனசமூக நிலையம் நாவாந்துறை (100,000.00) வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சங்கம் (200,000.00), குருநகர் விளையாட்டு மைதானம் (200,000. 00), குருநகர் பெண்கள் பாடசாலை(100.000.00), றெக்கிள மேசன் சனசமூக நிலையம் (100,000.00), சென் றெக் சனசமூகநிலையம் (50,000.00), செபஸ்தியார் முன்பள்ளி நிலையம், குருநகர்(50,000.00), அறிவகம் குருநகர் (50,000.00), கொழும்புத்துறை சனசமூக நிலையம்(50,000.00), ஆவே மரியா பகல் பாலர் பாடசாலை, குருநகர்(50,000.00), நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, பழையமாணவர் சங்கம் (100,000.00), ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் இணுவில் (200,000.00), இணுவில் கந்தசுவாமி கோயில், இளந்தொண்டர் சபை(300,000.00).

சம்பந்தப்பட்ட இருதரப்புகளும் மனம்விட்டுப் பேசுவதன் மூலமே முரண்பாடுகளுக்கு முடிவுகட்ட முடியும்

தென்னாபிரிக்க ம.உ.ஆ.கு. தலைவர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

சமாதானமும் மனித உரிமைகளும் எல்லோருக்கும் பொதுவானவை. ஜனாதிபதிக்கோ அன்றி பிரதமருக்கோ அல்லது எதிர்க்கட்சித் தலைவருக்கோ இவை உரியதல்ல. இலங்கையின் சமாதானத்தை ஏற்படுத்துவதில் எல்லோரும் அர்த்தபுஷ்டியுடன் செயல்பட வேண்டும்.

இவ்வாறு தென் ஆபிரிக்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான கலாநிதி லியோன் வெஸ்ஸல் நேற்று யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூட்டத்தில் ''தென்னாபிரிக்கா அமைதிப்பயணத்தில் இடைக்கால அரசியல் யாப்பு'' எனும் தலைப்பில் உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

யாழ். மறை மாவட்ட நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுவின் தலைவர் வண பிதா ஏ.ஜ.பேர்னாட் அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாநிதி லியோன் வெஸ்ஸல் தொடர்ந்து உரையாற்றும் போது,

ஒருநாட்டின் அரசியல் அமைப்பை மனிதனே ஆக்கினான். எதுவும் மனிதனால் மாற்றியமைக்கப்படக் கூடியது தான்.

தென்னாபிரிக்காவின் அரசியல் அமைப்பை இருபகுதியினர் பாராளுமன்றத்துக்கு வெளியேதான் ஆக்கினார்கள். பின்னர், அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரித்தனர். எனவே, தென்னாபிரிக்காவில் அரசியல் அமைப்பு ஒரு பெரும் பிரச்சினைக்குரியதாக இருக்கவில்லை.

அந்த அரசியல் அமைப்பில் 34 கோட்பாடுகள் இருக்கின்றன. அவற்றினை எல்லோருமே ஏற்று அங்கீகரித்து அதன் பிரகாரம் நடக்கின்றனர். எனவே மக்களுடைய நம்பிக்கைகள் அங்கு உயர்ந்தவைகளாக இருக்கின்றன. இந்த நம்பிக்கையானது சாதாரண மக்களிடம் இருந்து மேல்மட்டம் வரை ஒரே மாதிரியாகவே இருப்பது சிறப்பம்சமாகும். இதனால் அங்கு இப்போது முரண்பாடுகள்-மோதல்களுக்கு இடம் இருக்கவில்லை.

தென்னாபிரிக்காவில் சமாதானத்தையும், இயல்பு வாழ்க்கையையும் ஏற்படுத்துவதில் நெல்சன் மண்டேலா உயர்ந்த தியாகத்தினைச் செய்துள்ளார். அத்துடன், அங்குள்ள மதவாதிகள், விவசாயிகள், புத்திஜீவிகள், விவசாயிக் கூலிகள் உட்பட வேறுபலரும் தியாகங்களைப் புரிந்துள்ளனர்.

பேச்சுவார்த்தைகளின் போது சம்பந்தப்பட்ட இருபகுதியினர் மட்டுமே பங்கு பற்றினர். மூன்றாம் தரப்போ அல்லது நான்காம் தரப்போஇன்றியே நேருக்கு நேர்பேச்சில் ஈடுபட்டனர். அதனால் பேச்சுவார்த்தையை சமாதானத்தை நோக்கிய வழியில் இலகுவில் கொண்டு செல்ல முடிந்தது. முடிவில் வெற்றியைத்தான் கண்டது.

முரண்பாடுகளை நீங்குவதில், முரண்பாட்டில் அல்லது மோதலில்ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் நேருக்கு நேர்ஒரே கூரையின் கீழ் இருந்து மனம்விட்டுப்பேசி, முரண்பாடுகளுக்கு முடிவுகண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். இன்று இலங்கையில் எல்லோருமே விரும்புவது சமாதானந்தான். உள்ளக சுயாட்சி, வெளியக சுயாட்சி என்றெல்லாம் பேசப்படுகின்றது.இவை போருக்கு முற்றுப்புள்ளியை வைத்து விடுமா? எனக் கேள்வியெழுப்பினார். (உ-77)

ஏலவிற்பனை

பின்வரும் பொருட்கள் 07.06.2003 அன்று காலை 11.00 மணியளவில் ஏலத்தில் விடப்படும்.எடுப்பவர்கள் உடனே பணத்தைச் செலுத்தி அன்றே அப்புறப்படுத்த வேண்டும்.

1)பழைய மின் விசிறிகள்
2)ரியூப் லைட் தகரங்கள்
3)பழுதடைந்த குளிரூட்டிகள்
4)பழைய யன்னல் கதவுகள்
5)கதவு நிலைகள்

பணிப்பாளர்,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

C/6243]

கும்பாபிஷேகம்

நீர்வேலி ஸ்ரீ ஞான வைரவ சுவாமி ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 4ம்திகதி புதன்கிழமை மு.ப.9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மு.ப. 9 மணி முதல் பி.ப. 2மணிவரை சுவாமிக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (உ-10)

ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அரசடி வீதி ஜன சக்தி சனசமூக நிலையத்தின் 55 வது ஆண்டு நிறைவு விழாவின் இறுதி நாள் நிகழ்வு இன்று நிலையத் தலைவர் வ.தம்பித்துரை தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

நவக்கிரி அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு பாடசாலையின் அதிபர் க.சி. பகவத்சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் வலி.கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.யாழவன், கௌரவ விருந்தினராக கிராம உத்தியோகத்தர் எஸ். எழிலரசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-9)

சட்டவிரோத மின்பாவனை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பிரதேசங்களில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதாக அப்குதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் மின்பாவனையாளர்கள் முழுமையான மின்சாரத்தைப் பெறமுடியாது பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ- 75)

கொடியேற்றம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-75)

வறிய குடும்பங்களுக்கு ஆடுகள்

(ஊர்காவற்றுறை)

வறிய குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துமுகமாக கரித்தாஸ் நிறுவனத்தினால் வளர்ப்பு ஆடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டம் தற்போது ஊர்காவற்றுறையில் சின்னமடுப் பகுதியிலும், வேலணையில சுரவணையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (உ-75)

கணனிக் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினரால், யாழ்.மத்திய கல்லூரியில் நடாத்தப்படும் இலவச கணனிப் பயிற்சித் திட்டத்தின் கீழான கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவு எதிர்வரும் 16ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பாடசாலையை விட்டு வெளியேறிய சகலரும் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று உடன் விண்ணப்பிக்குமாறு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை கேட்டுள்ளார். (உ-3)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட

ஜனாதிபதியின் ஆலோசனையில்லாத பிரதமரின் மாற்றுத்திட்டத்தால் பயனில்லை

அரசியல் ஆய்வாளர் டி.பி.ஜெயராஜ் தெரிவிப்பு

(லண்டன்)

அரசாங்கம் தனது தற்போதைய பலத்தின அடிப்படையினை வைத்து தான், இந்த மாற்றுத்திட்ட யோசனையை முன்வைத்துள்ளது.

அதாவது ஜனாதிபதியின் எந்தவிதமான ஆலோசனையும் இதில் இல்லை. உண்மையிலே அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக் கூடிய நிறைவேற்று அதிகாரங்கள யாவும் ஜனாதிபதியிடம் தான் இருக்கின்றன.

ஜனாதிபதியின் ஆலோசனை இல்லாமலும் பாராளுமன்றின் அனுமதியில்லாமலும் அரசு வைத்திருக்கும இந்த ஆலோசனை சபையினால் எந்தவிதப் பயனும் இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் கோரி வந்த இடைக்கால நிர்வாக சபைக்குப் பதிலாக, அரசினால் முன் வைக்கப்படும் மாற்று அமைப்பினைப் புலிகள் நிராகரித்தது ஏன் என்பது பற்றி பி.பி.சி செய்தி ஊடகத்திற்கு விளக்கம் அளிக்கையில் அரசியல் பகுப்பாய்வாளர் ஜெயராஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

தமிழீழவிடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான விதியினை சரிவர கையாளக்கூடிய அதிகாரங்களைக் கொண்ட அமைப்பையே கோருகிறார்கள்.

சர்வதேச நாடுகள் வழங்கும் நிதிகள், வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு உரியவாறு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.

இந்நிலையில், அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள இந்த மாற்று அமைப்பு தொடர்பான யோசனை தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றதாக இல்லை என்பது புரிகிறது.

ஏனென்றால், மூன்று தளங்களாக அமைக்கப்பட்ட இம்மாற்றுத் திட்டத்தின் உச்சத்தில் இருக்கின்ற இந்த அமைப்பு, ஆலோசனைசபையாக இருக்கின்ற போது அதற்கு எந்த அளவிற்கு நிறைவேற்று அதிகாரங்கள் இருக்குமென்றோ அல்லது நடைமுறைப்படுத்தக் கூடிய அதிகாரம் இருக்குமென்றோ கூறமுடியாது.

அத்துடன் சட்டரீதியாக கூட இத்தகைய ஒரு ஆலோசனைச் சபையை வைத்துக் கொண்டு சில நடவடிக்கைகளை எடுக்கும் போது அதற்கு எதிராக நீதிமன்றில் எவராவது வழக்குத் தாக்கல் செய்தால் அந்தச் சபைக்கு அதிகாரம் இல்லை என்றே தீர்ப்பு வரும்.

இதனுடைய பின்னணிச் சிக்கல் என்னவென்றால்,

அரசினால் முன்வைக்கப்பட்ட மாற்று யோசனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் நிரா கரித்துள்ளமைக்குக் காரணம், அரசாங்கத்தால், முன்வைக்கப்பட்ட மாற்று அமைப்பு, ஆலோசனைச் சபையாகவே உள்ளது. அது எந்த விதமான அதிகாரங்களையும் கொண் டிருக்கவில்லை

அப்படியானால் அரசு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதிகாரங்களைக் கொண்ட நல்லதொரு சட்டத்தினைக்கொண்டு வந்து வழங்கலாம்.

இதனைவிடுத்து, தன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு நிர்வாக நடைமுறையை தன்பாட்டில் தயாரித்து அதிகாரப் பகிர்வை விட அதிகார பன்முகப்படுத்தும் போக்கைத்தான் அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது.

இத்தகைய அரசின் தன்னிச்சையான போக்கினாலும் செயற்பாட்டினாலும் விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்த முடியாது.

அவர்கள் அரசியலைப் பொறுத்தவரை மிக நுணுக்கமாகவும் அவதானமாகவும் நடந்து வருகிறார்கள்.

இதனால் தற்போதைக்கு எந்தவித பிரச்சினைகளும் ஏற்படப் போவதில்லை. குறிப்பாக தமிழீழ விடுதலைப புலிகள் சமாதான முயற்சிகளில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகிறார்கள் இது விடயத்தில் பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்படுகிறார்கள். எனவே போரை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கம் தற்போது அவர்களிடம் இல்லை. சமாதான முயற்சிகள் தொடரும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

எனவே, இதனால் உடனடி விளைவுகள் எதுவும் தற்போது இல்லாவிட்டாலும் டோக்கியோ மாநாட்டிற்கு அவர்கள் போவார்கள் என்ற நம்பிக்கை மிகவும் அருகிக் கொண்டே வருகிறது.

அத்துடன் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன பாலசிங்கம் தமது கடிதத்தில் ''பிராந்திய சக்திகள் தமிழீழ விடு தலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை விலக்கிக் கொள்ளாமல் இருப்பதன் மூலம் அமைதி வழி முறையில் ஒரு எதிர்மறையானதாக்கத்தை அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய சக்திகள் எனப்படும் இந்தியா, பிரிட்டன, அமெரிக்கா ஆகிய நாடுகள் வெவ்வேறு பின்னணியில் புலிகள் மீதான தடையை விதித்துள்ள போதும் இந்தியாவின் இந்தத் தடை உத்தரவிற்கு ஒரு சில காரணங்கள் இருக்கின்றன. ஆனால், பிரிட்டன், அமெரிக்காவைப் பொறுத்தவரையில் எந்தவித காரணமும் இருந்ததாகத் தெரியவில்லை.

அதிலும்,அமெரிக்காவைப் பொறுத்தவரை ஒரு முனையில் சமாதானத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது போல நாடகமாடி மறுபுறத்தில் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி தாண்டவம் ஆடுவதில் அர்த்தமிருப்பதாகப் புலிகள் கூறி வருவதில் நியாயம் இருக்கிறது.

எனவே, விடுதலைப் புலிகளின் இத்தைய கடும் போக்கிற்குக் காரணம அவர்களை வாஷிங்டன் மாநாட்டிற்கு அழைக்காதமையே என்பதையும் அவதானிக்க முடிகிறது.

அத்தகைய கசப்புணர்வுகளும் இவர்களின் இத்தகைய கடும்போக்கிற்கு மற்றுமொரு காரணமாக இருக்கிறது.

மேலும், சமாதானத்திற்கு தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள், மற்றும் சில அரசியல் வாதிகள் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமையும் புலிகளிற்கு பெரும் சந்தேகத்தையும், ஐயத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது.

எனவே, பிரதமர் விடுதலைப் புலிகளின் உண்மையான நிலைப்பாட்டை சர்வதேச நாடுகளுக்கு மட்டுமன்றி தென்னிலங்கை சிங்கள மக்கள், அரசியல்வாதிகளுக்கும் உணரவைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (உ-10)

தமிழ் மக்களின் ஒற்றுமையை உலகுக்குக் காட்ட ஒன்று திரள்வோம்

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தினை நசுக்குவதற்காக ஸ்ரீலங்கா இனவாத அரசினால் நடாத்தப்பட்டு வந்த யுத்தம் புலிகளின் ஆயுதபலத்தினாலும் அவர்கள் பின்னால் அணி திரண்ட தமிழ் மக்களின் எழுச்சியினாலும், ஓய்வுக்குக் கொண்டுவரப்பட்டு அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டு 15 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், 6சுற்றுப் பேச்சுகள் முடிவடைந்த நிலையிலும் கூட தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்படவில்லை. சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக மலைபோன்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் மனதில் சமாதானம் பற்றிய சந்தேகங்களும் நம்பிக்கையீனங்களும் தற்போது அதிகரித்து வருகின்றன. சமாதான பேச்சுக்கள் மூலம் தீர்வென்பது கனாவாகிப் போய்க் கொண்டிருக்கினறது. உடன்படிக்கையிலும் சமாதானப் பேச்சுக்களிலும் இணக்கம் காணபபட்ட விடயங்களை ஸ்ரீலங்கா அரசு சரிவர நிறைவேற்றத் தவறியமையே இதற்குக் காரணமாகும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பேச்சுவார்த்தையில் முதற் கட்டத்தில் இடைக்கால நிர்வாகம் பற்றிப் புலிகள் கதைத்த போதே அரசு சாட்டுப் போக்குகளை சொல்ல ஆரம்பித்து விட்டது.இடைக்கால நிர்வாகம் உட்பட தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய அதிகாரம் உள்ள எந்த விடயங்களைப் பற்றிக் கதைத்தாலும் சட்டத்தில் இடம் இல்லை என்பதினைச் சாட்டாகச் சொல்லி இழுத்தடித்து வருகின்றது.

இலங்கை அரசியல் யாப்பின் பிரிவுகளான 2,4(3),9,76(1)என்பன திருத்தி அமைக்கப்படும் வரை தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய நியாயமான எந்தவொரு தீர்வும் சாத்தியம் அற்ற நிலையில நடை பெறும் பேச்சுவார்த்தையில் சட்டத்தில் இடம் இல்லை என்பதைச் சாட்டாகக் கொண்டு புலிகள் விட்டுக் கொடுக்க வேண்டும் எனக் கூறி மக்களது வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்தாமல் புனர்வாழ்வு,புனரமைப்பு,அபிவிருத்தி ஆகிய நடவடிக்கைகள் இன்றியே தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தி,புலிகளின் உறுதி நிலையைக் குலைத்து,மக்கள் புலிகள் மீது வைத்துள்ள நம்பிக்கையை இழக்கச் செய்து புலிகளையும் மக்களையும் பிரித்து அதன் பின் தாம் நினைக்கின்ற தீர்வை புலிகள் மீது அதாவது தமிழ் மக்கள் மீது திணிக்க அரசு முற்படுகின்றது.கடந்த கால யுத்தத்தினாலும் அதலபாதாளத்தில் போயுள்ள தனது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப சமாதானப் பேச்சு என்ற மாயையினையும் ஏற்படுத்தி உலகம் முழுவதும் புலிகளைக் கூட்டிச் சென்று,உலக நிதியுதவிகளைப் பெற்று தமது பொருளாதாரத்தை நிமிர்த்தி விட அரசு முனைகின்றது.

இந்நிலையில் எமது மக்களின் வாழ்வில் இயல்பு நிலை ஏற்படுத்தப் படவேண்டும் எனவும், அழிந்து போன வடக்குக் கிழக்குப் பிரதேச மக்களின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை தமிழ் மக்களின் விருப்பம் போல் மேற்கொள்ளக் கூடிய அதிகாரம் உள்ள அமைப்பு உருவாக்கப் வேண்டுமனவும அல்லது அதற்கான உத்தரவாதம் ஆவது வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் இருந்து இடைவிலகி உள்ளனர்.மக்களது நலன்களை முழுக்க முழுக்க கருத்திற் கொண்டு புலிகள் எடுத்த முடிவானது தமிழ் மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

இந்நிலையில் சமாதானச் சூழ நிலை உருவாகி ஒருவருடம் கடந்து விட்ட நிலையிலும் குடா நாட்டின் திறந்த வெளிச் சிறைச்சாலையில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் அணி திரண்டு எமது பிரச்சினைகள், இராணுவக் கெடுபிடிகள்,எமது விருப்பங்கள் ஆகியவற்றை சர்வதேச சமூகத்திற்கு ஒரே அணியில் ஒரே குரலில் கூறுவது அவசியமான ஒன்றாக அமைகின்றது.அதாவது தமிழர் பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கான வீடுகளையும்,விவசாய நிலங்களையும்,மீன் பிடிப்பிரதேசங்களையும்,பாடசாலைகளையும்,வணக்கத் தலங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா படைகளினால் லட்சக்கணக்கான மக்கள் சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாதுள்ளது.அவர்களது வாழ்வுரிமை மறுக்கப்பட்டுமுள்ளது. மேலும் லட்சக்கணக்கான மாணவர்கள் தமது சொந்தப் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாதுள்ளதோடு மாணவர்களது கல்வி உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலுக்குச் செல்லும் போது இன்னமும் நேரக் கட்டுப்பாடு,தூரக்கட்டுப்பாடு பாஸ் கெடுபிடிகள், (10ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு — கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு எதிராக விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் பற்றி பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு

கௌரவ பிரதமரவர்களின் கட்டளைப்படி, கௌரவ பாதுகாப்பு அமைச்சினால் மேற்கூறப்பட்ட சம்பவம் தொடர்பாகவிசாரித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்காகவும் தேவைப்படுமாயின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஊடகவியலாளர்களுக்காகத் தெற்கில் ஊடகவியலாளர்களால் தற்போது அனுபவிக்கப்படும் விதம் சமமான பாதுகாப்பினையும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்காகவுமான சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காகவும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு 2003ஜுன் மாதம் 4ஆம்திகதியிலிருந்து 2003 ஜுன் மாதம் 6ஆம் திகதி வரை (இருநாட்களும் உட்பட) மு.ப.9.45 லிருந்து பி.ப.4.00வரையில் யாழ்ப்பாணக் கச்சேரியில் கூடவுள்ளது. இந்நாட்களில் வாய்மூல, எழுத்துமூல பிரநிதித்துவங்களைக் குழுவிடம் சமர்ப்பிக்க பொதுமக்களுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இக் குழு கீழ் காணப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.
திரு. ஒலிவர்.பீ.விரசேன (இளைப்பாறிய பெரு நீதிமன்ற நீதிபதி) - தலைவர்
திரு.ஈ.ஜீ.சந்திரரத்ன (சிரேஷ்ட உதவிச்செயலாளர் - மொழி ஊடக அமைச்சு) - அங்கத்தவர்

பாதுகாப்பு அமைச்சு
15/5, பாலதக்ஷ மாவத்தை
கொழும்பு - 03
2003 ஜுன் மாதம் 01ம் திகதி

ஆர்.ஏ.டி.எஸ். ரணதுங்க
குழுவின் செயலாளர்

[C/6242]

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடத்தும்
வரசுகி சொக்கலிங்கம்
எழுதிய
'மருதத்திணை'
நூல் வெளியீட்டு விழா

இடம்: யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடம்
காலம்: நாளை (02.06.2003) திங்கள் பி.ப.3மணி
ஆசியுரை: மஹாராஜஸ்ரீ சு.து. சண்முகநாதக் குருக்கள்
வாழ்த்துரை: துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்
வெளியீட்டுரை: பேராசிரியர் அ.சண்முகதாஸ்
ஆய்வுரை: கலாநிதி செ.திருநாவுக்கரசு

மற்றும்
அறிமுகவுரை, கருத்துரைகள் இடம்பெறும்

தமிழறிஞர் ஆர்வலர் அனைவரும் வருக

தமிழ் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

[C/6240]

ஈராக் மீதான போர் குறித்து தவறான தகவலை வழங்கினாராம்

பிரி. பிரதமர் மீது முன்னாள் அமைச்சர் குற்றச்சாட்டு

(லண்டன்)

ஈராக் மீதான போர் குறித்து தவறான தகவலை வழங்கியதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் மீது அந்நாட்டின் முன்னாள் அமைச்சர் ராபின் குக் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

அந்த முன்னாள் அமைச்சர் இது தொடர்பில் மேலும் கருத்துக் கூறு கையில்,

ஈராக்கிடம் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் எதுவும் இல்லை என பிரதமர் ரொனி பிளேயருக்கு நன்கு தெரியும்.

எனினும், போர் ஆரம்பித்த 45வது நிமிடத்தில் ஈராக் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்று தனது நாட்டு நாடாளுமன்றத்திற்கு பொய்யான தகவலை வழங்கியிருந்தார்.

இத்தகவல் பொய்யானது என்பதை நிரூபிக்கும் வகையில் அண்மையில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ற் வெளியிட்டிருந்த அறிக்கையொன்றில் போருக்கு முன்பே ஈராக் தன்னிடமிருந்த பேரழிவு ஆயுதங்களை அழித்துவிட்டதாக கூறப்பட்டிருந்தது.

மேலும், ஈராக் மீது போர் தொடுப்பதற்கான சரியான காரணம் எதனையும் கூறாமல் அந்த நாட்டிற்குப் படைகளை அனுப்பியிருந்த ரொனி பிளேயரால் அதற்கு சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் எந்தக் காரணத்தையும் கூற முடியாது என்று கூறியுள்ளார்.

ரொனிபிளேயர் மீது இது விடயம் குறித்து விசாரணைகளை நடத்துவது தொடர்பான கோரிக்கையொன்றை விடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களை ராபின்குக் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ-2)

ஜேர்மன் பிரதமர் ஜெராட் மீது அமெரிக்க அதிபர் ஆறாக் கோபம்

(வாஷிங்டன்)

பிரான்சில் இம்மாதம் முற்பகுதியில் நடைபெறவிருக்கும் ஜி-8 நாடுகளுக்கான உச்சி மாநாட்டின் போது ஜேர்மன் பிரதமர் ஜெராட் ஷ்ரோடருடன் உத்தியோகபூர்வமாக பேசப் போவதில்லை என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட புஷ்,

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த போரிற்கான உலக நாடுகளின் ஆதரவை தடுத்து நிறுத்தியது ஜேர்மன் என்றும், அதன் மீதுள்ள கோபம் தமக்கு இன்னும் தீரவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இக்காரணங்களாலேயே தான் இந்த உச்சி மாநாட்டின்போது ஜெராட் ஷ்ரோடரைச் சந்தித்துப் பேசப்போவதில்லை எனக் கூறியுள்ளார்.

அதேசமயம் உச்சிமாநாட்டில் அவருடன் பொதுவாகப் பேசுவேன், புகைப்படம் எடுத்துக் கொள்வேன் என்று குறிப்பிட்டுள்ளார். (உ-2)

உலக நாடுகளின் பாதுகாப்புத்துறையினர் சிங்கப்பூரில் சந்தித்துப் பேசுவர்

(சிங்கப்பூர்)

இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் மற்றும் முக்கிய வல்லரசு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் இராணுவத் தளபதிகளுக்கான கூட்டம் சிங்கப்பூரில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக இந்நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களும், இராணுவத் தளபதிகளும் நேற்று முன்தினம் சிங்கப்பூரை சென்றடைந்துள்ளனர்.

சர்வதேசப் பயங்கரவாதம் வடகொரியாவின் அணுவாயுத விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

அமெரிக்கப் பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் போல் வுல்போவிட்ஸ் பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராபர்ட்ஹில், ஜப்பான் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் உள்ளிட்ட 20 நாடுகளின் பாதுகாப்பு துறை அமைச்சர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர். (உ-9)

முகாபேக்கு எதிராக வெகுஜனப் போராட்டம்

(ஹராரே)

சிம்பாவே ஜனாதிபதி றொபேட் முகாபேக்கு எதிராகப் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்த வாரம் நடத்தப்போவதாக அந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டால் அவற்றை முறியடிக்க அரசாங்கம் கடுமையான நடவடிக்கையை எடுக்கும் என்று முகாபேயின் ஐந்து அமைச்சர்கள் தொலைக்காட்சியில் தோன்றி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த எதிர்ப்புப் போராட்டம் ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்படும் சதித்திட்டம் என்று குறிக்கப்பட்டுள்ள மேற்குறித்த அமைச்சர்களுள் ஒருவர் இத்தகைய போராட்டங்களை அனுமதிக்க முடியாது என்று கூறியுள்ளார். (உ-9)

கொங்கோவில் மனிதப் படுகொலை தடுக்க விரைகிறது பன்னாட்டுப் படை

(கின்ஷாசா)

கொங்கோ குடியரசின் பின்தங்கிய கிராமங்களில் இடம்பெற்று வரும் மனிதப் படுகொலைகளை தடுத்து நிறுத்தும் பொருட்டு பிரான்ஸ் தலைமையில் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த அமைதி காக்கும் படையினரை அங்கு அனுப்பி வைப்பதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை தீர்மானித்துள்ளது.

கொங்கோவின் இற்றில் பிராந்தியத்தில் இடம்பெற்று வருகின்ற மனிதப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை நடவடிககை எடுக்க வேண்டும் என மனித உரிமை அமைப்புக்கள் கோரிவந்தன.

அதற்கமைய கொங்கோவில் புலன் விசாரணைகளை நடத்தி வந்த ஐக்கிய நாடுகள் சபை அங்கு திட்டமிட்ட பாலியல் வல்லுறவுகள், கொலைகள், கடத்தல்கள் போன்ற சம்பவங்கள் இடம்பெறுவதை ஊர்ஜிதம் செய்துள்ளது.

இதனைடுத்து, பிரான்ஸ் தலைமையிலான அமைதி காக்கும் படையினரை கொங்கோவிற்கு அனுப்பி வைப்பதற்கான அங்கீகாரத்தை ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ளது. இந்த பன்னாட்டுப் படை அங்கு விரைந்து செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-9)

மத்திய கிழக்கின்

சமாதான நிலைமையை கண்காணிக்கும் பணியில் அமெரிக்க நிபுணர்கள் குழு

(வாஷிங்டன்)

அமெரிக்க நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று மத்திய கிழக்கு சமாதான நிலை குறித்து ஆராய அங்கு அனுப்பி வைக்கப்படும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

இக்குழு இஸ்ரேல் பலஸ்தீன சமாதான முயற்சிகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பது குறித்து கண்காணிக்கும் பணியில் 24 மணி நேரமும் ஈடுபடவுள்ளது.

இந்தக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ள அமெரிக்கக் குழுவினருடன் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகிய வற்றின் பிரதிநிதிகளும் இணைந்து செயற்படுவார்கள் என்பது குறித்து புஷ் நிர்வாகம் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

இதேவேளை, மத்திய கிழக்கு சமாதானத் திட்ட வரைபை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியன அமெரிக்காவுடன் இணைந்தே தயாரித்திருந்தமை குறிப்பித்தக்கது. (உ-9)

தீவிரவாதக் குழுக்களுக்கு கண்டிப்பான உத்தரவு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் காஷ்மீரில் இயங்கும் அனைத்துத் தீவிரவாதக் குழுக்களும் உடனடியாகத் தமது அலுவலங்களையும் முகாம்களையும் மூடிவிட வேண்டுமென்று பாகிஸ்தான் அரசு நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்தியா-பாகிஸ்தானிற்கிடையேயான உயர் மட்டப் பேச்சுகளுக்கு வழிசெய்யும் வகையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இரு நாடுகளுக்குமிடையே பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத முகாம்கள் அனைத்தும் மூடப்பட்டு விட வேண்டும் என அமெரிக்கா வற்புறுத்தி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)

எந்நாட்டுப் படையையும் எதிர்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு உண்டு

இந்தியக் குடியரசுத் தலைவர் வீராப்பு

(புதுடில்லி)

இந்தியா பலம் வாய்ந்ததொரு நாடு. அதன் ஆயுதப் படைகள் எந்தவொரு நாட்டின் சவாலையும் சந்திக்கும் திறன் கொண்டவை என்று இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் கூறியுள்ளார்.

பீஹாரின் நாலந்தா மாவட்டத்தில் ரயில் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக் கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி வைத்த பின்னர் அங்கு உரையாற்றுகையிலேயே கலாம் இவ்வாறு தெரிவித்தார்.

வேறு பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா நவீன ரக இராணுவத் தளபாடங்களையும், ஆயுதங்களையும் தயாரிக்கும் நுட்பத்தைப் பெருமளவில் பெற்றுள்ளதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-2)

வியட்நாமில் கடற்படைத்தளம் அமைக்க முயல்கிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

வியட்நாமில் தனது கடற்படைத் தளம் ஒன்றினை அமெரிக்கா அமைக்கவுள்ளது. இது குறித்து வியட்நாம் அரசை அமெரிக்கா அணுகவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வியட்நாமில் இடம்பெற்ற உள் நாட்டுப் போரின்போது கடற்படை வசதிகளை அங்கு அமெரிக்கா ஏற்படுத்தியிருந்தது.

தற்போது இருநாடுகளிற்கிடையேயும் சுமுக உறவு நிலவுவதன் காரணமாக அந்நாட்டை அணுகி கடற்படைத் தளம் அமைக்கும் யோசனையை அமெரிக்கா தெரிவிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-9)

WORLD NEWS
உலக தரிசனம்

நேபாள மன்னருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்

(காட்மண்டு)

நேபாள மன்னருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

தேசிய ஐக்கியத்திற்கேற்ற வகையில் நிறுவப்படும் இடைக்கால அரசாங்கத்தில் தமக்குப் பங்களிப்பு வழங்க வேண்டும் என நேபாள மன்னர் கஜேந்திரா கோரியிருந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதாக எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

நேபாளப் பிரதமராக இருந்து வந்த லோகேந்திரா பகதூர் சாண்ட் நேற்று முன்தினம் பதவியை இராஜினாமாச் செய்துள்ள நிலையில் நேபாள மன்னர் கஜேந்திராவுக்கு இந்த அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாகோ தீவிரவாதிகளுக்கும் நேபாள அரசிற்குமிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு லோகேந்திர பகதூர் சாண்டின் இராஜினாமா அரசியல் ரீதியில் பாதிப்புக்களை தோற்றுவித்துள்ளதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (உ-2)

ஜி-8 அமைப்பைச் சேர்ந்த நாடுகளுக்கான உச்சி மாநாட்டை எதிர்த்து சுவிற்சலாந்தில் கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதன்போது எட்டு நாட்டுத் தலைவர்களினதும் முகமாதிரிகளைக் கொண்ட முகமூடிகளை அணிந்து ஆர்ப்பாட்டக் காரர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்ததையே இங்கு காண்கிறீர்கள்.

அமுல்படுத்தாத தீர்மானங்கள் மத்தியில் பேச்சைத்தொடர்வது அர்த்தமற்றது

அரசின் மாற்று யோசனையை புலிகள் நிராகரித்தமை நியாயமானது

கஜேந்திரகுமார் எம்.பி. கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசின் மாற்று யோசனையை நிராகதித்தமை நியாயமானதே அத்துடன் ,அவர்கள் சமாதானப் பேச்சிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதும் சரியானதே.

சமாதானப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்டு வரும் தீர்மானங்களை அமுல்படுத்த தயங்கி வரும் அரசுடன் அவர்கள் இனியும் பேசுவதானால் அது ஒரு அர்த்தமற்ற பேச்சு வார்த்தையாகவே அமையும்.

இவ்வாறு யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கோரப்பட்டு வரும் இடைக்கால நிர்வாகத்திற்குப் பதிலாக மாற்று யோசனையை முன்வைத்து அரசு கடிதமொன்றை நோர்வே பிரதிநிதிகள் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியிருந்தது.

இந்நிலையில், அரசின் இம் மாற்று யோசனையை நிராகரித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரனபால சிங்கம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளமை பற்றியும் இம் மாற்று யோசனையை அவர்கள் ஏற்றுக்கொள்ளாதமைக்கான காரணம் பற்றியும் வெளிநாட்டுச் செய்தி ஊடகம் ஒன்றிற்கு கருத்துக் கூறுகையிலேயே கஜேந்திரகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்கள அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியல் யாப்பு ஒன்றைத் தயாரித்து அதன் கீழ் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்றால் அதை தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கூறுகையில் ,

அரசினால் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படடுள்ள மாற்று யோசனை பற்றி நாம் முழுமையாக அறிய வல்லை.

ஆயினும்,தமிழீழ விடுதலைப புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு அனுப்பியுள்ள பதிலில் இருந்து,நாம் சில விடயங்களை அறிதுகொண்டுள்ளோம்.

அக்கடிதத்தில் பிரதமரின் ஆலோசனைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில்இடைக்கால நிர்வாகத்தின் அவசியம் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் பிரதமரிற்கு தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறோம்.

இந்நிலைப்பாட்டைத்தான் தமிழீழ விடுதலைப்புலிகளும் கொண்டிருந்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு மிகவும் அவசியமானதெனக் கூறப்படும் இவ் இடைக்கால நிர்வாக சபையை சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பமாகி ஒன்றரை வருடங்கள் கடந்த தன் பின்னரும் பெற முடியாத நிலையில் , புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதில் எவ்வித பயனும் இல்லை.

இந்த மாநாட்டினால் வடகிழக்கு மக்களுக்கும் எந்தவொரு பயனும் கிடைக்கப் போவதில்லை.

ஏனென்றால ,இம் மாநாட்டின மூலமாக கிடைக்கப் போகும் நிதியை சரியான தொரு நிர்வாகக் கட்டமைப்பு மூலமாகத்தான் செலவு செய்யலாம்.

எனவே,தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபையை அரசிடம் கோருவது நியாயமானதென்றே கூறுகிறேன்.

இதனைத் தருவதாக தற்போதைய அரசு ஏற்கனவே கூறியிருந்தது.

ஆனால்,தற்போது இதற்குப் பதிலாக மாற்று யோசனை ஒன்றை முன்வைக்க முனைவது விடுதலைப் புலிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இவை தவிர,இலங்கையில் காலத்துக்குக் காலம் ஆட்சிப் பீடம் ஏறிவரும் சிங்கள அரசியல் கட்சிகள், 50 வருடங்களுக்குப் பின்னரும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுவரும் அரசியல் யாப்பை வைத்து, அதனை காரணம் காட்டி எங்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிராகரிக்க முயன்று வருவார்களாயின் அதனை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

அத்துடன்,அரசியல் யாப்பில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு நாங்கள் காரணமில்லை.அது சிங்கள மக்களால் உருவாக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.

(உ-10)

தற்போதைய அரசியல் அமைப்பு எமது எதிர்பார்ப்புக்களை ஈடு செய்யாது

சிவாஜிலிங்கம் எம்.பி. பல்கலையில் உரை

(யாழ்ப்பாணம்)

தற்போதுள்ள அரசியல் கடடமைப்பு மூலம் ,தமிழர்களா

கிய நாம் எதிர்பார்க்கின்ற எதனையும் தரமுடியாது.

எனவே,எமது சுய முயற்சியால் வடக்கு- கிழக்கை சமூக பொருளாதார,கலாசார,கல்வி ரீதியாக தென்னிலங்கையைப் போல் உயர்த்த வேண்டும்.

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற புலமைப்பரிசில் சான்றிதழ் வழங்கல் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதியும் ,பிரதமரும் ஒன்றிணையும் வரை நாட்டில் ஸ்திரமான அரசியல் நிலை உருவாக வாய்ப்பில்லை.

இவ்விருவரும் முரண்பாடுகளைக் களைந்து ஒன்றுபட்ட கொள்கையுடன் செயற்பட்டால் மாத்திரமே நாட்டில் சுமுக நிலைமை தோன்றும்.

இவ்விருவரின் ஒன்றுபடுதல் ஏற்படாதவரை எமது அபிலாசைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்க முடியாது.

எனவே,எமது கையே எமக்குப பலம் என்பதை எந்தக் காலத்திலும் நாம் மறந்து விடலாகாது.தமிழர்களை அழித்தொழிப்பதற்கு கங்கணம் கட்டி நின்ற வஞ்சனை மிக்க மறைந்த முன்னாள் அமைச்சர் செய்யத ஒரே ஒரு நல்ல காரியம் என்றால் இந்தப் புலமைப்பரிசில திட்டத்தை அறிமுகப்படுத்தியது தான் .

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதி மாணவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு போதாது. என்பதை நாம் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம் என்றார்.

மேலும் குறிப்பிடுகையில், பல்கலைக்கழக மாணவர்கள் எம் தேசியத்திற்காக கடுமையாக உழைத்து வருகிறார்கள். நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டிய கடமை அவர்கள் கைகளிலேயே உள்ளது என்று குறிப்பிடடார்.

(உ-4)

இந்தியத் திரைப்பட விழா

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ரஷ்ய கலாசார நிலையத்தில் எதிர்வரும் ஜுன் மாதம் 11,12,14 ஆம்திகதிகளில் இந்திய திரைப்படவிழா நடைபெறவுள்ளது.

ஆசிய திரைப்பட நிலையத்தினருடன் சேர்ந்து இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஒழுங்கு செய்துள்ள இத்திரைப்பட விழாவில் ஒவ்வொரு நாளும் பி.ப. 5.30 மணிக்கு படக்காட்சி இடம்பெறவுள்ளது.

(உ)

உவர் நிலமாக மாறியதால்

செய்கை பண்ண முடியாத நிலையில் 4509 ஹெக்டேயர் நிலப்பரப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த காலங்களில் விவசாயச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த நிலப்பரப்பில் 4ஆயிரத்து 509 ஹெக்டேயர் இதுவரை உவர் நிலமாக மாறியுள்ளது.

இதன் காரணமாக மேற்படி நிலப்பரப்பில் விவசாயச செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் தமது விவசாயத்தினைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

விவசாய நிலங்கள் உவர் நிலமாக மாறியுள்ளமையை எவ்விதம் மாற்றி பயிர்சசெய்கைக்கு ஏற்ற நிலமாக மாற்றலாம் என்பது பற்றிய ஆய்வுகளை மேற் கொள்ள வேண்டும் என அரச அதிபர் வேண்டுகோள வடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக யாழ். குடாநாட்டில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாயக் காணி வீணே இருப்பதாலும் இவ்வாறு உவர் நிலமாக மாறியிருப்பதாலும் விவசாயிகள் பெரும் இழப்பையும் ஈடு செய்ய முடியாத பொருளாதாரக் கஷ்டத்தையும் எதிர் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-77)

பயிர்ச் செய்கைக்கு பயன்பட்ட 18 கிணறுகளைப் படையினர் மூடினர்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் யுத்தம் இடம்பெற்ற சமயத்தில், விவசாயிகளுக்கு சொந்தமான 18 கிணறுகளைப் பாவிக்க முடியாத வகையில் படையினர் மூடியுள்ளனர்.

இதனால்,இப்பகுதியில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளால் தமது விவசாய நடவடிக்கைகளை மீளவும ஆரம்பிக்கமுடியாத நிலைக்குதள்ளப்பட்டுள்ளனர்.

இக்கிணறுகளைப் புனரமைத்துத் தரஉரிய நடவடிக்கைகளை செய்து தரும்படி நாவற குழி பகுதியின் விவசாயிகள் தென்மராட்சி பிரதேசசெயலர் க.கேதீஸவரனிடம்கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பிரதேச செயலர்,யாழ்.மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.(உ-77)

பட்டதாரிஆசிரிய நியமனத்தை ஏற்க இம்மாத நடுப்பகுதி வரை அவகாசம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் அண்மையில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் தமது கடமையை பொறுப்பேற்றக இம்மாதம் 15ஆம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு 3 கட்டங்களாக ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்ட பாடசாலைகளுக்கே முன்னுரிமை அடிப்படையில் இந் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவர்களில் பலர் இன்னமும் தமது நியமனத்தைப் பொறுப்பேற்கவில்லை என்பதால் இவர்களுக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட பாடசாலைகளைத் தவிர,வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(தி)

சனி, வியாழன், ராகு, கேது மாற்றங்களால் ஏற்படும் பொதுப் பலனை அறிந்து கொள்ளுங்கள்!

சனிமாற்றம் (22.05.2003) பொதுப் பலன்கள்

22.05.2003இல் சனி இடபராசியில் இருந்து மிதுன ராசிக்கு மாற்றமடைந்து இரண்டரை வருடங்கள் வரை மிதுனத்திலேயே சஞ்சாரம் செய்யும்.

23.07.2003 இல் வியாழன் கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு மாற்றமடைந்து ஒரு வருடம் வரை சிங்க ராசியிலேயே வியாழன் சஞ்சாரம் செய்யும்.

14.08.2003இல் இராகு, கேதுக்கள் இடபம், விருட்சிகத்தில் இருந்து முறையே மேடம், துலாம் இராசிகளுக்கு மாற்றமடைந்து ஒன்றரை வருடங்கள் வரை அவ ராசியிலேயே சஞ்சாரம் செய்யும். இக்கிரக மாற்றத்தினால் இவ்வருடம் இலங்கையில் அரசியல், இராணுவ, சமூக, பொருளாதார மாற்றங்கள் உண்டாகும்.

தனுசு:

(மூலம், பூராடம், உத்திராடம், 1ம் பாதம் பிறந்தவர்களுக்கு 22.05.2003 முதல் 26.06.2005 வரை சனி பகவான் சப்தம ஸ்தானம் என்னும் 7ல் இருப்பார்).

தங்கமான மனம் படைத்த தனுசு ராசி நேயர்களே! கடந்த 21/2 வருட காலமாக சனி பகவான் 6ல் இருந்து எண்ணற்ற வெற்றிகளை ஈட்டித் தந்துள்ளார். எடுத்த காரியம் யாவிலும் சாதகம் ஆனது. காதல் கனிந்து களிப்பு மேலோங்கியது. மாமன் மைத்துனர் மூலம் தனவரவு கிட்டியது.

தற்சமயம் சனி பகவான் உமது ராசிக்கு 7ல் வருகிறார். இது களத்திர ஸ்தானம் ஆகும். உமது மனைவியின் உடல் நலனில் கவனம் தேவை. தொழில் கூட்டாளிகளிடம் மன வேற்றுமை உண்டாக இடமுண்டு. கவனம் தேவை. எனினும் அச்சத்திற்கிடமில்லை. கடின உழைப்பும் விடா முயற்சியும் தேவை.

சனி பகவானின் 3,7,10 ஆகிய பார்வை மூலம் உமது ராசிக்கு 9,1,4 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

சனிபகவானின் 3வது பார்வையினால் உமது ராசிக்கு 9ம் வீட்டைப் பார்வை செய்வதால் தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. இளைய சகோதரருடன் இணக்கமான போக்குக் காணும்.

சனி பகவானின் 7வது பார்வையினால் உமது ஜென்ம ராசியை பார்வை செய்வதால் உடல் நலனில கவனம் தேவை. பிரயாணத்தின் போது பணம் பத்திரம். செய்யும் தொழிலில் அலைக்கழிப்புக்கு இடமுண்டு. கீழ் நிலைச் சிப்பந்திகளிடம் எச்சரிக்கையுடன் இருப்பது நலம்.

சனி பகவானின் 10வது பார்வையினால் உமது ராசிக்கு 4வது வீட்டைப் பார்வை செய்வதால் வீடு மனை, பூமி, தோட்டம் என வாங்க இடமுண்டு. எனினும் அதனை வாங்கும் போது மூலப் பத்திரங்களை சரியாகச் சட்டரீதியாக கவனித்து வாங்குவது நலம்.

வியாபாரிகளுக்கு: நூதனமான தொழில் தொடங்க இடமுண்டு. வங்கிகள் மூலம் நிதியுதவிகள் கிடைக்கும். அனைத்து வகை ஏஜெண்சி இனங்களிலும் நல்ல லாபம் தரும். எனினும் அரசு சார்புடைய ஏஜெண்சி உரிமை உடையவர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளைச் சரிவரச் செலுத்திவிடுவது நலம்.

விவசாயிகளுக்கு: மானாவாரி பயிர்கள் நல்ல விளைச்சல் தரும். பழத் தோட்டம், பூந்தோட்டம் லாபம் தரும். பணப் பயிர்களை சரிவரப் பாதுகாக்கவும். சிலருக்கு அரசு வழி மானியம் கிடைக்க இடமுண்டு.

பெண்களுக்கு : கணவன் மனைவி இடையில் ஊடலும் கூடலும் உண்டு என்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நலம். கருவுற்ற தாய்மார்கள் கடினமான வேலைகளை செய்யாமலிருப்பது நலம்.

உத்தியோகஸ்தர்களுக்கு: அஞ்சலகம், தொலைத்தெடர்பு, போன்ற பிரிவினர் ஏற்றம் காண்பர். நூலகம், பதிவு அலுவலகம், பொதுஜனத் தொடர்பு, செய்தி விளம்பரம் போன்ற பிரிவுகளில் அபிவிருத்தி கிட்டும்.

மாணவர்களுக்கு: சாட்டட் கணக்காளர் பிரிவினர் நல்ல அனுகூலம் அடைவர். எனினும் கடுமையாக உழைக்கத் தயாராக இருக்க வேண்டும்.

கலைஞர்களுக்கு: பொதுஜனத் தொடர்பு, ஒப்பனை, எழுத்துத் துறை, ஒலி ஒளி போன்ற பிரிவினர் மிக்க அனுகூலம் அடைவர். உழைப்புக்கு தகுந்த கணிசமான ஆதாயம் கிடைக்கும்.

குருபகவான் சஞ்சார பலன்

22.07.2003 வரை குரு பகவான் உமது ராசிக்கு 8ல் சஞ்சாரம். இதனால் வாக்கினால் வளமும் நலமும் சேரும். போக்குவரத்து மூலம் பணம் அதிகம் செலவாகும். கடன் தீரும். புதிய முயற்சிகளில் அதிக பிரயாசை தேவை.

23.07.2003 முதல் 14.08.2004 வரை குருபகவான் 9ல் சஞ்சாரம். இதனால் தந்தை மூலம் தனலாபம் கிட்டும். வெளிநாடு 'செல்லும் வாய்ப்புக் கிட்டும். புதிய முதலீடுகள் செய்ய நேரும். புத்திர பாக்கியம் கிட்டும். தனவந்தர்களின் ஆதரவு கிடைக்கும்.

15.08.2004 'முதல் 13.05.2005 வரையில் குருபகவான் உமது ராசிக்கு 10ல் வருவதால் இடமாறுதல் கிட்டும். வேலைப் பழு கூடும். வீடு, மனை,பூமி வாங்க இடமுண்டு. சிலருக்கு தந்தையின் வேலை கருணை அடிப்படையில் கிடைக்கும்.

14.05.2005 முதல் 25.09.2006 வரை குரு பகவான் உமது ராசிக்கு 11ல் வருவதால் பதவி உயர்வு கிட்டும். மூத்த சகோதர வழியில் உதவியும் ஒத்தாசையும் பெறலாம். வீடு, மனை, பூமி சீர்திருத்தம் செய்ய இடமுண்டு.

ராகு பகவான் சஞ்சார பலன்

14.08.2003 வரை ராகு பகவான் உமதுராசிக்கு 6ல் அமர்வு. இதனால் எதிர்பாராத வெற்றிகள் கிட்டும். விதவை மாதரால் அனுகூலம் உண்டு. அம்மான் வகையினரால் அனுகூலம் உண்டு.

15.08.2003 முதல் 04.03.2005 வரை ராகுபகவான் உமது ராசிக்கு 5ல் சஞ்சாரம். இதனால் உயர் கல்வியில் மிக்க கவனம் தேவை. கருவுற்ற தாய்மார்கள் மிகவும் எச்சரிக்கையுடன் நடப்பது நலம்.

05.03.2005 முதல் 21.09.2006 வரை ராகு பகவான் உமது ராசிக்கு 4ல் வருவதால் போக்குவரத்தில் கவனம் தேவை. தாயாரின் உடல் நலனில் பொறுப்பு எடுத்து கவனித்தல் நலம்.

கேது பகவான் சஞ்சார பலன்

14.08.2003 வரை கேது பகவான் உமது ராசிக்கு 12ல் அமர்வு. இதனால் புனித ஸ்தல யாத்திரை செல்ல இடமுண்டு. செய்தொழில் எதுவானாலும் கவனமாக இருப்பது நலம். உயர் அதிகாரிகளின் எரிச்சலுக்கு உள்ளாக நேரிடும்.

15.08.2003 முதல் 04.03.2005 வரை கேது பகவான் உமது ராசிக்கு 11ல் அமர்வு. இதனால் தெய்வீக பிரார்த்தனைகள் வெற்றி பெறும். ஞானிகள் மகான்களின் அருளாசி கட்டும். சிலர் திருப்பணிகளில் ஈடுபட நேரும். தெய்வீக அறக் கட்டளைகள் அமைக்கவும் இடமுண்டு.

05.03.2005 முதல் 21.09.2006 வரை கேது பகவான் உமது ராசிக்கு 10ல் அமர்வு. இதனால் உத்தியோகம் அல்லது தொழில் போன்றவற்றில் அதிக கண்ணும் கருத்துமாக இருப்பது நலம். கணபதி ஹோமம் செய்வது நலம்.

சனி பகவான் சஞ்சார பலன்

22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரம் இதனால் தோட்டத் தொழில், எரிபொருள், சரக்கு ஏற்றுமதி இறக்குமதி போன்ற துறையில் இருப்போர் நல்ல அனுகூலம் பெறுவர்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் ராகுபகவான் சாரத்தில் சஞ்சாரம். இதனால் தொழிலில் மிகுந்த சுறுசுறுப்புக் கூடும். வேறு மொழி பேசுவோரால் அனுகூலம் உண்டு. போக்குவரத்து மின்னியல், இலத்திரனியல் போன்ற பிரிவினர் ஏற்றம் பெறுவர்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் குரு பகவான் சாரத்தில் சஞ்சாரம். இதனால் சரளமான பணப்புழக்கம் உண்டு. உயர் அதிகாரிகளின் ஆதரவும் செல்வந்



தரின் நட்பும் இருக்கும். பணம் கையாளும் பணியினர் மிக்க கவனமுடன் பணிபுரிய நன்று.

சனி பகவான் வக்கிரம்

25.11.2003 முதல் 16.02.2004 மற்றும் 13.11.2004 முதல் 13.03.2005 வரை சனிபகவான் வக்கிரம் ஆக சஞ்சாரம். இத்தருணத்தில் கொடுக்கல் வாங்கலில் சற்று சங்கடம் உண்டாகும். யாருக்கும் பிணைக் கையெழுத்துப் போட வேண்டாம். இளைய சகோதர வழியில் ஒத்துழைப்புக் கிட்டும்.

நட்சத்திர பலன்

மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு: உமது நட்சத்திர நாயகர் கேது. சனி பகவானுக்கும் கேதுவுக்கும் பகை. இதனால் உடல் நலனில் கவனம் தேவை. மருத்துவச் செலவுகள் மிகுந்து காணும். எனினும் குரு பலத்தினால் இன்னலுக்கு இடமில்லை.

பூராடம் நட்சத்திரத்திற் பிறந்தவர்களுக்கு: உமது நட்சத்திர நாயகன் சுக்கிரன். அவர் சனி பகவானுக்கு நட்பு. இதனால் பிரிந்த தம்பதிகள் சேர்ந்து வாழ இடமுண்டு. ஆடை அணிமணிகளின் சேர்க்கை உண்டு. பிரயாண முகவர், கலை சாதனங்கள் போன்ற பிரிவினர் ஏற்றம் அடைவர்.

உத்தராடம் 1ம் பாதம் பிறந்தவர்களுக்கு: உமது நட்சத்திர நாயகன் சூரியன். அவர் சனி பகவானுக்கு பகைவர். இதனால் உமது தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. அரசுப் பணியில் இருப்பவர்கள் மிக்க கவனமுடன் பணிபுரிதல் அவசியம்.

தாரா பலன்.

மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு: 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் பிரத்யக்கு தாரையில் சஞ்சாரம். இதனால் போக்குவரத்தில் மிக்க கவனம் தேவை. வேறு மொழி பேசுவோரால் அனுகூலம் கிட்டும். திட்டமிட்டு செயற்பட நன்று.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் சாதக தாரையில் சஞ்சாரம். எதிர்பாராத வெற்றிகள் தேடி வரும். போக்குவரத்து, மின்னியல், இலத்திரனியல் போன்ற துறையினர் நலன் கூடும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனி பகவான் வதை தாரையில் சஞ்சாரம். இதனால் உடல் நலனில் கவனம் தேவை. மருந்து உட்கொள்வதில் அல்லது உணவு முறை மாற்றத்தில் ஒவ்வாமை உண்டாக இடமுண்டு. கவனம் தேவை.

பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு: சனி பகவான் 22.05.2003 முதல் 10.07.2003 வரை க்ஷேமத் தாரையில் சஞ்சாரம். இதனால் வசதிகள் கூடும். வாய்ப்புகள் தேடி வரும். சுற்றமும் நட்பும் சூழும். ஆடை, அணிகலன்களின் சேர்க்கை உண்டாகும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரையில் சனிபகவான் பிரத்யக்கு தாரையில் சஞ்சாரம். இதனால் எடுக்கும் காரியம் எதுவாயினும் அதில் அதிக எச்சரிக்கையுடன் திட்டமிட்டு கவனமாக ஈடுபட நன்று.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் சாதக தாரையில் சஞ்சாரம். இதனால் தொட்டது துலங்கும். வெற்றி மீது வெற்றி வந்து சேரும். எதிலும் சாதகமாகவே நடக்கும்.

உத்திராடம் 1ம் பாதம் பிறந்தவர்களுக்கு: 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் விபத்துத் தாரையில் சஞ்சாரம் செய்வதால் போக்குவரத்தில் கவனம். தந்தையின் உடல் நலனிலும் மிக்க கவனம் தேவை.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் க்ஷேமத் தாரையில் சஞ்சாரம். இதனால் வேலையில்லாமல் தவித்தவர்களுக்கு வேலை கிடைக்கும். அரசு வழி அல்லல் அகலும். அனுகூலம் தேடி வரும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் பிரத்யக்கு தாரையில் சஞ்சாரம். இதனால் உமது பணிகளில் திட்டமிடல் அவசியம். பதட்டமில்லாமல் செயற்பட நன்று. பதறினால் சிதறிவிடும் என்பதை மறக்க வேண்டாம்.

ஜோதிட மணி துரைராஜ்

பரிகாரம்

சனி பகவான் உமது ராசிக்கு 2,3க்குடையவர் அவர் கண்ட ஸ்தானம் 7ல் சஞ்சாரம். குரு பகவான் 8,9,10,11 ஆகிய வீடுகளில் சஞ்சாரம். ராகு பகவான் 6,5,4,3ல் சஞ்சாரம். கேது பகவான் உமது ராசிக்கு 12,11,10,9 ஆகிய வீடுகளில் சஞ்சாரம். இதனால் பரிகாரம் செய்வது அவசியம் ஆகும். பிரதி சனிக்கிழமை சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றி 9 முறை வலம் வரவும். தினசரி காக்கைக்கு அன்னமிட நன்று. தசரதர் அருளிய தாரித்ரிய தஹன ஸ்தோத்திரம் பாராயணம் செய்க. பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்க. சிவ புராணம் படிக்க நன்று. விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தியன்று அறுகம்புல்லினால் அர்ச்சனை செய்க. செவ்வாய் ராகு காலத்தில் துர்க்கைக்கு தீபம் ஏற்றவும். துர்க்காஸ்த்தவம் பாராயணம் செய்க. (தொடரும்..)

ஜே.வி.பியுடன் கூட்டமைத்தால் பொ.ஐ.மு உறுப்பினர்கள் பலர் கட்சி மாறுவதைத் தடுக்க முடியாது

பொதுநிர்வாக அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே கூட்டமைப்பு ஏற்பட்டால் அது அரசியல் ரீதியாக ஐ.தே.மு அரசாங்கத்துக்கே சாதகமாக அமையும் என பொதுநிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இவ்விரு கட்சிகளுக்குமிடையே குறிப்பிட்ட கூட்டமைப்பு உருவாகி மீண்டும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டால் அத்தேர்தலில் எம்மால் வெற்றி பெற முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் கூட்டமைப்பை ஏற்படுத்திய பின்னர் பொதுத் தேர்தல் நடைபெற்றால் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து பெரும்பாலானோர் விலகிச் செல்வார்கள் என்பதுடன் அவர்களை தடுக்க முடியாது.

இக்கூட்டமைப்பு இரு கட்சிகளனதும் இறுதிக் கட்ட நடவடிக்கையாக அமையும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கூட்டமைப்புக் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அதன் பின்னர் இரு கட்சிகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெறும் என மக்கள் விடுதலைக் கூட்டணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மேலும் கூட்டமைப்பை ஏற்படுத்தி தேர்தல் ஒன்றுக்கு செல்வது தொடர்பில் தாங்கள் இதுவரை முடிவு செய்யவில்லை எனவும் அவ்வாறு தேர்தல் ஒன்று நடைபெற்றாலும் தங்களால் வெற்றி பெற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

385 மாணவர்களுக்கு நேற்று புலமைப்பரிசில் சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 2002/2003 கல்வியாண்டு மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இந்துசமய விவகாரங்கள் அமைச்சின் அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், யாழ்.அரச அதிபர் சி.பத்மநாதன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அப்பாத்துரை விநாயகமூர்த்தி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்மோகனதாஸ், முன்னாள் துணைவேந்தர் பி.பாலசுந்தரம் பிள்ளை, மேலதிக அரசாங்க அமைச்சர் திருமதி பத்தினியம்மா திலக நாயகம் போல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதல் நிலை மாணவனான சிவநாதன் அபராயிதனுக்கு கேடயத்தையும் மகாபொல புலமைப்பரிசிற்கான காசோலையையும் அமைச்சர் திமகேஸ்வரன் முதலில் வழங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்க அதிகாரிகளும் மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுக் காசோலையை வழங்கினார்கள்.

இவ்வருடம் 385 யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

சிறு விளம்பரம்

(O/L) MATHS

O/L கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இது வரை சித்தியடையாதவர்களுக்கும் 38 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் A பெறு பேறடைவதற்குக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம் காலை 6.00- 9.00. க.ஆறுமுகநாதன், 10,கச்சேரி கிழக்கு ஒழுங்கை வலது பக்கம் 5ஆம் இல்லம் சுண்டுக்குளி. (7112)

சார்ஸ் விழிப்பு சுவரொட்டி

(சுதுமலை)

சார்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சு பல வர்ணங்களிலான சுவரொட்டியை வெளியிட்டுள்ளது.

இச் சுவரொட்டியை மக்கள் கூடும் சகல பொது இடங்களிலும் காட்சிப் படுத்துமாறு சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சுவரொட்டியில்,சார்ஸ் நோய் பரவும் முறை,சார்ஸ் நோயின் அறிகுறிகள் ,தடுப்பு முறைகள் பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-252)

கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில், சப்பறம்,தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 27,28,29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-10)

பாதிப்புற்ற மாணவர்களுக்கு பாடநூல்கள

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மீண்டும் இலவச பாடநூல்களை வழங்க கல்வி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய இரத்தினபுரியில் பாதிக்கப்பட்ட 149 பாடசாலைகளுக்கும், மாத்தறையில் பாதிக்கப்பட்ட 48 பாடசாலைகளுக்கும்,அம்பாந்தோட்டையில் பாதிக்கப்பட்ட 94 பாடசாலைகளுக்கும் முறையே 39ஆயிரத்து 225, 8ஆயிரம், 5ஆயிரத்து 500 பாடப்புத்தகங்கள் வீதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (தி)

பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

உடல் எண் ~ 9
உயிர் எண் ~8

9,18,27 போன்ற திகதியில் பிறந்த இவர்களது பிறந்த திகதி,மாதம்,வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண்-8 வருமேயானால் இவர்கள் செவ்வாய்,சனி போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்குத் திடகாத்திரமானவர்களாகவும், மனபலம் கொண்டவர்களாகவும்,தெளிவான சிந்தனையாளர்களாகவும், எல்லாஉலக விஷயங்களையும் தெரிந்தவர்களாகவும் காட்சி அளிப்பர். இவர்களது மனம் மின்னல் வேகத்தில் சிந்திக்கக் கூடியது. தன் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைப் போராடியே வெற்றி பெற வேண்டும் என்ற கொள்கையுடையவர்.

கவர்ச்சி

தான் எதைச்செய்தாலும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று எண்ணுவர். சமயப்பற்றுடையவராகவும், தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையுடையவராகவும் இருப்பர்.இவர்கள் பேசுகின்ற பேச்சும்,இவர்கள் எழுதுகின்ற நடையும் பிறரைக் கவரும்படி இருக்கும்.இவர்கள செய்கின்ற தொழிலில் சிறப்பான இடத்தை வகிப்பர். புதிய புதிய திட்டங்களைப் போட்டுத் தனது பொருளாதாரத்தை உயர்த்த ஓடோடி உழைப்பர். இவர்களைச் சார்ந்துள்ள நண்பர்களுக்கு உதவ முன்வருவர்.

தன்மனதில் பட்ட கருத்துக்களை மறைக்காது வெளியிடுவர். பயணம் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள். இவர்களுக்குப் பெயர் பொருத்தமான எண்களில் அமைந்து விட்டால் நல்ல ஆரோக்கியம்,நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், பெரும் செல்வம் ஆகியவற்றைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்வர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் வீண் குழப்பங்களும்,குடும்பப்பிரச்சினைகளும், பொருளாதார வீழ்ச்சிகளும் ஏற்பட்டு இவர்களுக்கு மன வேதனை,உடல் நலக் குறைவு உண்டாகும்.

கற்பனா சக்தி

இதனால் பெயரைப் பொருத்தமான எண்ணில் மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டியது அவசியம்.பொதுவாக இவர்கள் மனம் தொழில்கூடங்களையும்,எலக்ட்ரானிக் கருவிகளையும் ,புதிய வாகனங்களையும்,புதிய கட்டடங்களையும் கண்டு மகிழ்ச்சி அடையும். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் ஒப்பந்த வேலைக்காரர்களாகவும், வியாபாரிகளாகவும், அரசியல் தலைவர்களாகவும், எஞ்சினியர்களாகவும், வக்கீல்களாகவும், பலதரப்பட்ட உத்தியோகத்தர்களாகவும் வாழ்கின்றனர்.

ஆனால் ,பெயர் நன்றாக அமையாவிட்டால் நோயாலோ, குடும்ப வாழ்க்கையாலே, பொருளாதாரத்தாலோ பிரச்சினைகள் உருவாகிக் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் தொழில் செய்வதன் மூலம் உயர்ந்த நிலையில் இருக்கின்றனர். கற்பனாசக்தி அதிகம் இருப்பதால்,கற்பனையில் உருவாகும் கதை,கவிதை போன்றவைகளில் ஆற்றல் உடையவர்களாக இருக்கின்றனர். தான் கண்ட காட்சிகளை அழகாக வாணித்துக கூறுவர். சில நேரங்

சோதிட பலன்

களில் இவர்களின் முரட்டுக் குணமும், முன்கோபமும் வெளியாகிறது. இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் அமைத் துக்கொண்டு சிறப்புற்று வாழ வாழ்த்துகிறேன்.

தொழில்

ஒப்பந்த வேலைகள், ஏஜென்ஸீஸ், இரும்பு சம்பந்தமான தொழில் ,வாகனத்தாலான தொழில் ,விவசாயம், பாற்பண்ணை, கட்டடத்தொழில், பல்பொருள் வியாபாரம் போன்றவைகள் சிறப்பாகும்.

நோய்

இவர்களுக்கு வயிற்றுக் கோளாறு, முதுகுவலி ,நரம்பு சம்பந்தமான வியாதிகள், மூல வியாதி, பல் வலி,மூட்டுவலி, ஆஸ்துமா,இரத்த அழுத்தம், சர்க்கைரை நோய் போன்றவைகள் வந்து நீங்கலாம்.

பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குப் புதன் ஆதிக்கமான 14,23,32,41, 50,59,77 போன்ற எண்களிலும்,சுக்கிரன் ஆதிக்கமான 15, 24,33,42,51,60,69 போன்ற எண்களிலும்,செவ்வாய் ஆதிக்கமான 27,36,45போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-9,6,5.யோகமான திகதிகள்- 6,15,24,5, 14,23,9, 18,27.யோகமான மோதிரக்கல்-பவளம் நீலக்கல். யோகமான நிறம்- சிவப்பு, நீலம், மஞ்சள்.ஆகாத திகதி- 2,11,20,29,7,16,25,8,17,26.ஆகாத நிறம்-கறுப்பு,கோப்பிக்கலர், பச்சை.

உடல் எண் ~9
உயிர் எண் ~9

9,18,27,போன்ற திகதியில் பிறந்து,பிறந்த திகதி,மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 9 வருமேயானால்,முழுமையான செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.இந்த எண்ணிக்கையில் பிறந்த இவர்கள் கம்பீரமான தோற்றத்துடனும் பார்ப்பவர்களைக் கவரும் காந்த சக்தியுடனும்,சுறுசுறுப்புடனும் காட்சி அளிப்பர்.

தனது மனக்கருத்துக்களைத் தெளிவாக வெளியிட்டுப் பிறரின் உயர்வுக்கு உறுதுணையாய் இருப்பர். இவர்களுக்கு எப்பொழுதும் நண்பர்கள் கூட்டம் உண்டு.தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்த்த ஓடோடி உழைப்பர். கலை நுணுக்கமும்,ஆராய்ச்சி அறிவும் கொண்ட இவர்கள் புதிய முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பர்.

பிறருக்கு உதவி

திடமான மனநிலையும், தெளிவான சிந்தனையும் இருப்பதால் தனக்கு வரும் இடர்ப்பாடுகளை நிதானமாகத் தகர்த்தெறிவர். தூரதேசப் பயணங்கள் செய்வதாலும், புதிய தொழில் முறைகளையும்,புதிய நண்பர்களையும் உருவாக்கிக்கொள்வர்.தனது மனக்கருத்துக்களை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகக் கூறுவர். எக்காரணத்தைக்கொண்டும் பிறருக்குத் தீங்கு செய்யும் காரியங்களில் இறங்க மாட்டார்கள். தன்னால முடிந்தவரை பிறருக்கு உதவி, நல்ல பெயர் எடுப்பர். இதனால இவரைப் பலர் உபகாரி என்று அழைப்பர். இயற்கைக்காட்சிகளையும்,அழகான கட்டடங்களையும், மலைப்பிரதேசங்களையும் ,கலை நுணுக்கமான பொருள்களையும், புதுமையான எலக்ட்ரானிக் கருவிகளையும்,ஆடம்பரமான பொருள்களையும் கண்டு இவர்கள் மனம் லயிக்கும்.பேச்சாலும், எழுத்தாலும்,கலையாலும் பெரும் புகழ் அடைவர். பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மனிதர்களது தொடர்பு உண்டாவதன் மூலம் தன் தகுதியை உயர்த்திக் கொள்வர். எவ்வளவு இடர்ப்பாடுகள் வந்தாலும் அதை எப்படி முறியடிப்பது என்ற திட்டம் தீட்டி, வெற்றி கொள்வர். தனது முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்ல வேண்டும் என்ற நோக்கோடு இயங்கிக்கொண்டே இருப்பர்.

இரசனை

தனது முன் வாழ்க்கையில் நடந்த நல்ல ,கெட்ட நிகழ்ச்சிகளைத் தனிமையில் சில நேரங்கள் மனதில் கொண்டு வந்து ரசிப்பர். பலரை உயர்த்தக் கர்ணமாக இருக்கும் இவர்கள் தானும் படிப்படியாக உயர்ந்து விடுவர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால்,எவ்வளவு முயன்றாலும் மீண்டும் தோல்வியடைய நேர்ந்து விடுகிறது. குடும்ப வாழ்க்கை குழப்பமானதாகவும்,ஆரோக்கியம் சரியின்றியும்,பிரச்சினைக்குள்ளாக நேர்கிறது. இதனால் இவர்கள் பெயரைப் பொருத்தமான எண்களில் அமைத்துக் கொண்டு சிறப்புடன் வாழலாம்.

இந்த எண்ணில் பிறந்த பலர் கலைஞர்களாகவும , பேச்சாளராகவும, எழுத்தாளராகவும், டாக்டராகவும், எஞ்சினியராகவும்,தொழில் அதிபராகவும்,வியாபாரிகளாகவும் , உத்தியோகத்தர் களாகவும் வாழ்கின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமையாதவர்கள் பிரச்சினைக்குள்ளாகின்றனர். இதனால் பெயரை நல்ல எண்ணில் அமைத்துக் கொண்டு நல்ல ஆரோக்கியம்,நல்ல மனைவி,நல்ல குழந்தைகள் ,நிறைந்த செல்வம் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன்.

ஆர்.ஐ.துரைமுருகர்

தொழில்

கலை நுணுக்கத்தொழில், ஒப்பந்த வேலைகள்,கமிஷன், ஏஜென்ஸீஸ்,கட்டடத்தொழில், பல பொருள் வியாபாரம், ஆடம்பரப்பொருள் வியாபாரம் போன்றவற்றால் உயர்வடைவர் .

நோய்

இவர்களுக்கு வாயுக் கோளாறு ,மூட்டுவலி, வயிற்றுக் கோளாறு, இடுப்புவலி, கண்நோய், பல்வலி,இரத்த அழுத்தம்,இருதய வலி போன்றவைகள் வந்து நீங்கலாம்.

பெயர் அமைக்கும் முறை

புதன் ஆதிக்கமான 14,23,32,41, 50,59,77போன்ற எண்களிலும், சுக்கிரன் ஆதிக்கமான 15, 24,33,42,51,60,69போன்ற எண்களிலும், செவ்வாய் ஆதிக்கமான 27,36,45போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-9,6,5.யோகமான திகதிகள்- 6,15,24,5,14, 23, 9,18,27.யோகமான மோதிரக்கல்- பவளம்.யோகமான நிறம்- சிவப்பு ,நீலம்,மஞ்சள். ஆகாத திகதி- 2,11,20,29,7, 16,25.ஆகாத நிறம் -பச்சை.

(முற்றும்)

அரசின் மாற்றுத் திட்டத்திற்கு எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக மாற்றுத்திட்டம் பற்றி பல்வேறு அரசியல் கட்சிகளும் வெவ்வேறான அபிப்பிராயங்கள் வெளியிட்டுள்ளன.

சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரட்ன கருத்து வெளியிடுகையில், இதனை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். இந்த இடைக்கால நிர்வாகம் பரிகாசத்திற்குரிய ஒன்று. அரசாங்கம் இப்பிரேரணையை மேற்கொண்டு முன்னெடுக்குமாயின் நாம் சட்ட நடவடிக்கை எடுக்க தயங்கப் போவதில்லை.

இது நாட்டின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இடைக்கால நிர்வாகத்தினுள் விடுதலைப்புலிகளையோ வேறு நாட்டவரையோ அனுமதிப்பின் அது நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தல் ஆகும்.

முக்கிய எதிர்க்கட்சிகளான பொது ஜன ஐக்கிய முன்னணியும்,மக்கள் விடுதலை முன்னணியும் இதனை தமது முழுப்பலத்துடனும் எதிர்க்க வேண்டும் என்று கூறியுள்ளா.

இதேவேளை,மக்கள் ஐக்கிய முன்ன ணித்தலைவர் தினேஷ் குணவர்த்தனா, விடுதலைப் புலிகளின் கைகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கி அரசு மக்களை தவறாக வழி நடத்துகிறது. இது வடக்கு-கிழக்கை அடிப்படையாகக் கொண்ட பாசிச ஈழத்தைப் பெற்றுக்கொடுக்கும் செயலாகும். தமது கடற் படையின் செயற்பாடுகளை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கவே புலிகள் விரும்புகிறார்கள். இதனை மக்கள் ஐக்கிய முன்னணி முறியடிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

லங்கா சமசமாஜக்கட்சியும் இதே கருத்தைக் கொண்டுள்ளதாக அதன் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வாசுதேவ நாணயக்கார இதனை முழுமையாக வரவேற்பதாக கூறியிருப்பதுடன்,இதன்மூலமே புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக அமுலாக முடியும்.இது தொடர்பான அரசின் நிலைப்பாடு சரியானதே. இதன் மூலம் வடக்கு கிழக்கின் மீள் புனரமைப்பு புனர் நிர்மாணப்பணி களுக்கு உதவ முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்விதமிருக்க, அரசாங்கம் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை தொடர்பான மாற்றுப்பரிந்துரையை தமிழீழ விடுதலைப்புலிகள் அடியோடு நிராகரித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

ஈழத்துத் தமிழ்க் கவிதை ஆய்வரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

தூண்டி இலக்கிய வட்டம் நடாத்தும் ஈழத்துத் தமிழ்க் கவிதை ஆய்வரங்கு நேற்று யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

இன்றைய இரண்டாம் நாள் நிகழ்வுகள் மு.ப. 9 மணிக்கு கலாநிதி எம். ஏ. நு.ஃமான் தலைமையில் இடம்பெறவுள்ளன.

முதலாம் அமர்வில் கவிஞர்களான ஊர்வசி, சிவரமணி, மைதிலி அருளையா, ஆழியாள் ஆகியோரின் கவிதைகளை பா.அகிலனும், இ.முருகையன்,சில்லையூர் சிவராசன், தருமு சிவராம்,ஆத்மா ஆகியோரின் கவிதைகளை மு.பொன்னம்பலமும், கவிஞாகளான அஸ்வகோஸ் றஷ்மி, கருணாகரன், அமரதாஸ் ஆகியோரின் கவிதைகளை அ. ஜேசுராசாவும் ஆய்வு செய்யவுள்ளனர்.

தொடர்ந்து கவிதை நாடகம் இடம்பெறவுள்ளது.

இரண்டாவது அமர்வு பி.ப. 1.30 மணிக்குபேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

கவிஞர்களான மஹா கவி,வே. பஞ்சாட்சரம்,காரை சுந்தரம் பிள்ளை,கல்வயல் வே.குமாரசாமி ஆகியோரின் கவிதைகளை கலாநிதி செ. திருநாவுக்கரசும் கவிஞர்களான காசி ஆனந்தன், ஈழவாணன், நட்சத்திரன் செவ்விந்தியன் , த.ஜெயசீலன் ஆகியோரின் கவிதைகளை சோ. பத்மநாதனும், கவிஞர்களான சுபத்திரன் சண்முகம் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை, சாருமதி ஆகியோரின் கவிதைகளை கலாநிதி எம். ஏ நு.ஃமானும் ஆய்வு செய்யவுள்ளனர் .

தொடர்ந்து கவிதை நாடகம் இடம்பெறவுள்ளது. (உ-8)

இன்று ஒரு தகவல்

நியூட்ரினோக்கள்!

ஒருவர்கையில் சிக்காமல் தப்பிக் கொள்வது ஒருவகையான சாமர்த்தியம். ஒருவர் கண்ணில் படாமல் தப்பிவிடுவது அதை விடப் பெரிய சாமர்த்தியம். 'கண்ணில் மண்ணைத் தூவி விட்டுத் தப்பிவிட்டான் சார்' என்று சொல்கிறார்கள் அல்லவா? அப்படி யென்றால், ஒரு கைப்பிடி மண்ணை அள்ளி அவன் கண்ணுக்கு நேராகத் தூவிவிட்டுப் போய்விட்டான் என்று அர்த்தமில்லை. அவ்வளவு சாமர்த்தியமாகத் தப்பிவிட்டான் என்று அர்த்தம். தப்பிக் கொள்வதற்கும் புழுதியை உபயோகிப்பதாக நாம் சொல் லிக் கொள்கிறோம். ஆனால் புழுதியே நம்மிடமிருந்து தப்பிக் கொண்டுள்ளது அது தெரியுமா?

புழுதி என்றால் சாதாரண 'தூசு'இல்லை. அது கண்ணுக் குத் தெரியாத நுண்ணிய துகள். அந்தத் துகள் என்ன செய் யும் தெரியுமா? நமது உடம்பில் ஒருபக்கத்தால் நுழைந்து மறுபக்கத்தால் தப்பித்துக் கொள்ளும். நமக்கு எதுவும் தெரியாது! எந்தப் பொருளைத் தடுப்பாக வைத்தாலும் சரி... ஒரு பெரிய இரும்புத் தடுப்பை வைத்தாலும் சரி...இந்தத் துகள் அதை ஊடுருவிப் போய்விடும். அதைப் பிடித்து விடவேண்டுமென்று விஞ்ஞானிகள் எவ்வளவோ முயற்சி பண் ணிப் பார்க்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் கையில் சிக்காமல் அது தப்பித்துக் கொண்டுதான் இருக்கிறது.. மிகவும் கில்லா டியான ஒரு துகள் இந்தத் துகள்களுக்கு என்ன பெயர் தெரியுமா? நியு,ட்ரினோக்கள் (Neutrinos).

விண்வெளியிலேயிருந்து இந்த நுண்ணிய துகள்கள் எப் பொழுதும் இங்கு பாய்ந்து வந்து கொண்டேதான் இருக்கின் றன. விண்வெளியில் இப்படி ஒரு துகள்இருக்கிற தென்பது விஞ்ஞானிகளுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் அதைப் பிடிப்ப தற்குத் தான் முடியவில்லை. கையில் சிக்கமாட்டேன் என்கிறது. இதை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்பதற்காக இந்தியா உள்ளிட்ட பலநாட்டு நிபுணர்களும் பொறிவைத்து ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது அந்த நியூட்ரினோக்களை வளைத்துப் பிடிப்பதற்குப் பொருத்தமாக ஒரு சாதனத்தைக் கடலுக்கு அடியில் கொண்டுபோய் வைக்கப் போகிறார்கள். இதற்காகப் பசுபிக்கடலில் ஹவாய்த்தீவுகளுக்குப் பக்கத்தில் கடலுக்கு அடியில் ஆராய்ச்சிக்கூடம் ஒன்ற அமைக்கப்போகிறார்கள். இந்த ஆராய்ச்சிக் கூடம் கிட்டத்தட்ட அந்தத் துப்பறிகின்ற வேலை யைத் தான் செய்யப் போகின்றது. அது சரி, இந்த வேலை, ஏன்? கடலுக்கு அடியிலே நடக்கிறதென்றால் விண்வெளியிலேயிருந்து வருகின்ற நியூட்ரினோக்கள் நீரின் வழியாகப் பாய்கின்ற பொழுது, அணுக் கருக்களின்மேல் மோதி 'மியுவான்' (muon) என்கின்ற மின்னேற்றம் கொண்ட துகள்களை வெளியிடும்படி செய்யுமாம். இந்த மியுவான் தண்ணீர் வழியாகப் போகிற பொழுது, ∴போட்டான்களின் மின்காந்த அதிர்ச்சி அலையைத் தோற்றுவிக்குமாம். இது, ஆராய்ச்சி கூடக் கருவிகளில் பதிவா கிவிடும். இதன் மூலமாக நியூட்ரினோக்கள் உள்ளதைக் கண்டறி யலாம் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

'சரி' இதை ஏன் கடலுக்கு வெளியிலேயே வசதியாகப் பண் ணக் கூடாது?' என்று கேட்டால், சாதாரண ஒளி, விண் ணி லிருந் து வருகின்ற காஸ்மிக் கதிர்கள் போன்றவைகள், ∴போட்டான்களை உண்டாக்கும். இது ஆராய்ச்சிக் கூடக் கருவிகளில் இடையூறு பண்ணக் கூடாது அல்லவா? குழப் பமாகிவிடுமே! அதனால், நியூட்ரினோ கண்டுபிடிப்பு ஆராய்ச் சிக்கூடம் கடலுக்கு அடியில் உருவாகின்றது. நீரானது ஒளியை யும், காஸ்மிக் கதிர்களையும் தடுத்துவிடும்.

கண்ணுக்குத் தெரியாத துகளைக் கண்டு பிடிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது பார்த்தீர்களா? அந்தத்துகளைவிட சாமர்த்தியமான திருடர்கள் நமது ஊரில் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றியெல்லாம் கேள்விப்பட்டால் அந்தத்துகளே வெட்கப்படும். ஒரு பெரிய கும்பல் ஒரு திருட னைத் துரத்திக் கொண்டுதிருடன் திருடன் என்று கத்திக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. திருடனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இருந்தாலும், தொடர்ந்து ஓடுகிறார்கள். அந்தக் கும்பலில் ஓடிய ஒருவர், ஓரிடத்தில் அசந்துபோய் உட்கார்ந்து விட்டார். மற்றவர்களெல்லாரும் தொடர்ந்து ஓடுகிறார்கள். 'என்சார், உட்கார்ந்து விட்டீர்கள்? உங்களால் தொடர்ந்து ஓட முடியவில்லையா? என்று அந்தப் பக்கமாக வந்த ஒருவர் கேட்டார். 'இனிமேல் நான் ஓடவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அந்தக் கும்பல் முழுவதும் என்னைத்தான் துரத்திக் கொண்டு அங்கே ஓடிக்கொண்டி ருக்கிறது.' என்று அந்த ஆள் சொன்னார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

எழுச்சி கொண்ட பெண்களால்தான் நல்ல சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்

(கிளிநொச்சி)

எழுச்சிகொண்ட பெண்களால் தான் நல்ல சமுதாயத்தை கட்டி யெழுப்ப முடியும் எனவே நல்ல சமுதாயத்தை கட்டியெழுப்ப நாமெல லோரும் எழுச்சி கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பா ளர் தமிழினி.

நேற்று முன்தினம் மன்னாரில் ஆரம்பமான தமிழர் தாயக மகளிர்

மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழினி

சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தமிழினி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிகையில், பெண்கள் தலைமைத்துவப்பண்பு வாய்ந்தவராக இருக்க வேண்டும். அவர்களில் தலைமைத்துவப் பண்பினை நாங்கள் வளர்த்தெடுக்க வேண்டும். தலைமைத் துவப் பண்பினை வளர்த்தெடுக்கும் ஒரு பயிற்சிப் பட்டறையாக இது அமைய வேண்டும்.

பெண்கள் தமது பிரச்சினை களை உறுதியுடன் எதிர்கொண்டு தீர்வு காணக்கூடிய மனநிலையை வளர்த்தெடுக்க வேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் ஒட்டு மொத்தமாக சமூகத்திலும் தாயக தேசத்திலும் மாற்றங்கள் நிரந்தரமாக உருவாகுமென்று கூறி னார். (உ-3)

குற்றச் செயல்களைக் குறைக்கும் நோக்கில் பிரதமர் பணிப்பில் உயர்மட்டக் குழு

(கொழும்பு)

தொடரும் குற்றச்செயல்களைக் குறைக்கும் முகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு அரசாங்கத்திற்கும் பொலீஸுக்கும் குற்றச்செயல் தடுப்புப் பற்றிய ஆலோசனைகளை வழங்கவுள ளது.

தற்போது மக்களிடம் பாதுகாப் பின்மையையும், அச்ச உணர்வை யும் ஏற்படுத்தியுள்ள, அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் பற்றி அதிக கவனம் செலுத்தப்படவேண்டு மென பிரதமர் கடந்த புதனன்று அமைச்சரவையில் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த பாதுகாப்பற்ற நிலைமையைக் கட்டுப்படுத்துவ தற்கான மேற்படி திட்டங்களை பொலிஸ்மா அதிபர் ஈ.இ.ஆனந்தராஜா வகுத்துள்ளார்.

அத்துடன், இந்நடவடிக்கை நீண்டகாலத்திற்கு பயன்தரக் கூடிய தாயிருக்கவேண்டும் என்றும் தெரி வித்துள்ளார்.

இவ் உயர்மட்டக் குழுவில் வர்த்தக கூட்டு சம்மேளனத்தின் பிரதிநிதி, உள்துறை அமைச்சின் செயலாளர், பொலிஸ்இன்ஸ்பெக்டர், ஜனாதிபதி யின் பிரதம செயலாளர் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிபர் ருத்ரா ராஜ சிங்கம் ஆகியோர் அங்கம வகிக்கின் றனர். உளதுறை அமைச்சின் பிரதி செயலாளர் இக்குழுவின் செயலா ளராக நியமிக்கப்பட்டுள்ளார். இக் குழுவின் செயற்பாடுகள் இன்று முதல் நடை முறைக்கு வரவுள்ளன. (உ)

இராசி பலன்

01. 06. 2003

(வைகாசி 18, ஞாயிறு)

பிரதமை மு.ப. 11.41 வரை
மிருகசீரிடம் பி.இ.3.42 வரை
இராகுகாலம் 4.22 - 5.52
சுபநேரம் 8.52 - 10.22

மேடம்
தடைப்பட்ட காரியம் நிறைவேறும், அந் நியர் உதவி,கூட்ட முயற்சி.தன வரவு.

இடபம்
உஷ்ண வியாதி,அதிக வார்த்தை,காரிய தாமதம் போசன சுகம்.

மிதுனம்
கற்பனை மிகுதி,வாக்கு மேன்மை,பிறர் உதவி,முயற்சி கைகூடும்.

கடகம்
காரிய அலைச்சல்,சுப செலவு,எதிர் பாராத மனஸ்தாபம்,ஆழ்ந்த சிந்தை.

சிங்கம்
தொழிலில் புதிய சிந்தை,வருமானம் கிடைக்கும்,காரிய அனுகூலம்,கீர்த்தி.

கன்னி
பிறருக்கு உதவுதல்,அதிக முயற்சி, முயற்சி கைகூடும்,தெய்வ சிந்தை.

துலாம்
மனக்கட்டுப்பாடு,பிரயாணம்,புதிய திருப் பம்,முயற்சி தாமதம்.

விருச்சிகம்
எதிர்பாராத மனஸ்தாபம்,வாகன பயம், உடல் வியாதி,காரிய தாமதம்.

தனுசு
களஸ்திர சுகம்.சென்ற இடத்தில் செல் வாக்கு,முயற்சி கைகூடும்,சிந்தனை மிகுதி.

மகரம்
தேகசுகம்,எடுத்த காரியம் கைகூடும்.புதிய முயற்சி,விருந்துபசாரம்.

கும்பம்
வியாபார விருத்தி,குடும்பக் கவலை, சகோ தரர்களால் நன்மை,காரிய தாமதம்.

மீனம்
அதிகாரம்,திடீர் நன்மை,மனச் சோர்வு, முயற்சி தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்வது எப்படி?

போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிஸார் பெண்களுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து செல்லும் பெண்களுக்கு போக்குவரத்துக் கண்காணிபபுப் பொலிஸார் அறிவுறுத்தல்களை வழங்கி யுள்ளனர். மோட்டார் சைக்கிளில், அதனை ஓட்டுபவருக்குப் பின்னால் அமர்ந்து செல்லும் பெண்கள் இடது புறமாகப் பார்த்தவண்ணம் அமர்ந்து செல்லுவது இனிமேல் தண்டனைக் குரிய குற்றமாகக் கருதப்படும்.

மாறாக ஓட்டுபவரைப் பார்த்தபடி கால்களை இரண்டுபக்கமும் போட்டு அமர்ந்திருப்பதே சரியானது.

தவிரவும்,பின்னால் இருப்பவர் தலைக்கவசம் அணிவது மிக முக்கிய மானது என்று தெரிவித்துள்ளனர்.

மேலும்,அதிகரித்து வரும் விபத்துக்களைத் தடுக்கும்பொருட்டு ஒருவழிப் போக்குவரத்து நடை முறை இறுக்கமாகப் பின்பற்றப்பட உள்ளது.

கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ் வீதி என்பனவற்றில் ஒருவழிப்பாதை கட்டாயமாக நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது.

இந்த வீதிகளில் தரித்து நிற்கும் வாகனங்களும் தீவிர கண்காணிப் புக்குள்ளாகும்.

பதிவு செய்யப்படாத வாகனங் கள் எக்காரணம் கொண்டும் வீதிகளில போக்குவரத்தில் ஈடுபட முடியாது என்று தெரிவித்தனர். (உ-7,4)

குதிரையோட்டப் போட்டி 42 வருடத் தடை விலகுகிறது

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 1961ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்ட குதிரை யோட்டப் போட்டிகளை சட்டபூர்வமாக்கி, மீண்டும் அதனை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியப்படு கின்றது.

இதற்கென கொழும்பை அண்டிய பகுதிகளில் பொருத்தமான இடம் தேடப்படுவதுடன் நுவரெலியாவில் உள்ள குதிரைப்பந்தையத் திடலை புனரமைக்கும் பணிகளும் இடம் பெறுகின்றன.

மேலும், உல்லாசப் பயணத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு தெழிலவாய்ப்புக்களை அதிகரிக்கும் பொருட்டும் இப்போட்டிகளை மீண்டும நடை முறைப்படுத்த விருப்பதாக வும் கூறப்படுகின்றது. (உ-8)

கல்வி முறையில் விரைவில் மாற்றம்

கல்வி அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

தற்போதுள்ள கல்வி நடை முறை யில் மாற்றங்களை கொண்டு வருவ தற்கு பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ரஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்வி நிர்வாக உத்தி யோகத்தர் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைச் சர் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில்கல்வி நடைமுறை களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம்.

இது தொடர்பாக அரசாங்கம் தற போது கூடிய கவனம்செலுத்தி வருகிறது எனத்தெரிவித்துள்ளார். (தி)

மண்சரிவைக் கண்டறிய நிபுணர்கள் அடங்கிய குழு

(கொழும்பு)

தென்பகுதியில் மண்சரிவுகள் ஏற்படக்கூடிய பிரதேசங்களை இனங் காணும் பொருட்டு அரசாங்கம் 8 நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

சமூகசேவைகள் அமைச்சும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலைய மும் இணைந்து கூட்டாக இவ்வாய்வு வேலைகளை ஆரம்பித்துள்ளன.

அண்மையில் ஏற்பட்ட மண் சரிவு அனர்த்தங்கள் போன்ற விளை வுகளை கட்டுப்படுத்தும் நோக்குட னேயே அரசாங்கம் இக்குழுவை நிய மித்துள்ளது. (தி)

காட்டு விலங்கு காத்திடுவீர்
நாட்டு வளம் பேணிடுவீர்

எந்நிறன்று இரங்குவ செய்யற்க செய்வானேல
மற்றன்ன செய்யாமை நன்று.
– குறள்

வலம்புரி

பிரதமரின் மாறாட்டம்

இடைக்கால நிர்வாக சபையை உருவாக்குமாறு விடுதலைப்புலிகள் முன்வைத்த கோரிக்கைக்கு, மாற்றுத்திட்டமாக அரசு முன்வைத்த அபிவிருத்திக் கவுன்சில் திட்டத்தைப் புலிகள் அடியோடு நிராகரித்துள்ளனர்.

வடக்குக் கிழக்குப் புனரமைப்புப் பணிகளை அபிவிருத்திக் கவுன்சில் மூலம் நிறைவேற்றலாம் என பதில் எழுதிய பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா, தனது கடிதத்தில் அபிவிருத்திக் கவுன்சிலில் விடுதலைப்புலிகளுக்கு இருக்கக் கூடிய அதிகாரம் பற்றி எதுவுமே பிரஸ்தாபிக்கவில்லை. இதனைச் சுட்டிக் காட்டியுள்ள விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அரசின் அபிவிருத்திக் கவுன்சில் திட்டத்தை புலிகளின் தலைமையகம் நிராகரித்துள்ளதாக பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் நிராகரிப்புக் கடிதம் கிடைத்ததும், பிரதமர் சிரேஷ்ட அமைச்சர்களுடன் மந்திராலோசனை நடத்தியுள்ளதுடன், புதிய திட்டமொன்றைத் தயாரித்து விடுதலைப்புலிகளுக்கு அனுப்பும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

தனது முன்னைய யோசனையை நிராகரித்த நிலையில், மற்றுமொரு திட்டமொன்றைப் பிரதமர் தயாரிக்க முற்படுவது அவரின் அரசியல் அனுபவமின்மையையே காட்டுகிறது.

அதாவது,தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையைப் புலிகள் நிராகரித்த பின்னர் மற்றுமொரு மாற்றுத் திட்டத்தை பிரதமர் தயாரிக்க முற்படுவாராயின்,அவர் முதலில் தயாரித்த மாற்றுத் திட்டம் பொருத்தமானதல்ல என்பதையே அது உறுதிப்படுத்துகிறது.

மண்மீட்புக்காகப் போராடிய விடுதலைப்புலிகள் சமாதானப்பாதைக்கு திரும்பியுள்ள போது அவர்களைத் தகுந்த முறையில் திருப்திப்படுத்துவது அரசின் கடமை. அதனை விடுத்து, ஏதோ குழந்தைப் பிள்ளைகளிடம் கையைப் பொத்திக் கொண்டு ஏமாற்றுவித்தை காட்டுவது போல் அரசு நடந்து கொள்வது மீண்டும் யுத்த மேகம் கருக்கட்டச் செய்வதாகவே அமையும்.

இம்மாதம் 9ஆம் திகதி டோக்கியோ மாநாடு நடைபெற விருப்பதால் விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு அரசு இணங்கிப் போவதே ஒரே வழியாகும். அரசினால் விடுதலைப்புலிகளிடம் கையளிக்க வேண்டிய இடைக்கால நிர்வாக சபை என்பது இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை விட எவ்வளவோ கீழ் மட்டமானதென்பதால், அரசு இடைக்கால நிர்வாக சபையைப் புலிகளிடம் ஒப்படைப்பதில் காலதாமதத்தைக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

மற்றவர்களின் நிலையிலிருந்து நாம் சிந்தித்தால் பிரச்சினைகளைச் சமாளிப்பது சுலபமாகும்

பரமபிதா காட்டிய பாதை

ஜோ.ஜெஸ்ரின்

மனிதர் யாவரும் மகிழ்ச்சியை எதிர்பார்த்திருப்பது இயல்பே! ஆனால் மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தாமல் நாம் மகிழ்ச்சிக்காய் ஏங்குவது மடமைத்தனமாகும். நம்மைச சூழஉள்ளவர்களிற்கு எதுவாயினும் நல்லது செய்ய வேண்டும். சிறு முயற்சிகளுக்குக் கூட பாராட்டுவது மிகவும அவசியம் சின்னச் சின்ன விடயங்களே பெரிய பெரிய பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாயுள்ளன. நான் திருந்திவிட்டேன் மற்றவர் திருந்திவரட்டும் என்று எங்களை நாங்களே நியாயப்படுத்தி வருகின்றோம். மற்றவர் நிலையில் இருந்து நாம் சிந்திக்கின்ற போது பிரச்சனைகள் தீரும். கருணை எம்மில் குடிகொள்ளும்.

உலகில் நடக்கின்ற பிரச்சினைகளுக்கெல்லாம் தனி மனித உள்ளங்களில் எழுகின்ற போராட்டங்களே காரணமாகின்றன. நான் என்ற சுய நலத்தோடு வாழாமல் நாம் நாமெனும் நற்சிந்தனையுடன் வாழ வேண்டும். ''தன்னைத்தானே தாழ்த்துகின்றவன் எவனும் உயர்த்தப்படுவான்'' (யேசுநாதர்) என்ற பரம பிதாவின் கூற்றிற்கிணங்க புகழ்ச்சியை விரும்பாது தாழ்ச்சியால் எம்மை உயர்வடையச் செய்வோம்.

கனவுகளும் கற்பனைகளும்

உளப்பாரங்களுடன் - அளவுக்கதிகமான ஆசைகளுடன் வாழ்க்கையில் இலக்கை அடைய முடியாதுள்ளது.(உ+ம்) வீட்டில் இருந்து அலுவலகத்தைப்பற்றிச் சிந்திப்பது அலுவலகத்திலிருந்து வீட்டைப் பற்றிச் சிந்திப்பது ..... இதனால் இரண்டும் கெட்ட நிலையாகத்தான் முடியும். வாழ்க்கையில் நடந்து முடிந்ததையே தினமும் இரை மீட்டுப்பார்க்கின்ற போது, வெறும் கனவுகளும், கற்பனைகளும் தான் மிஞ்சுபவை. நடந்து முடிந்ததை எண்ணிக கொண்டிருந்தால் அது மாறிவிடுமா என்ன? முடிந்தது முடிந்ததுதான். ஆனால் இனி நடக்கப் போவதைப்பற்றி சிந்திப்பது, ஆற்றல் ஆளுமையுடன் ஒருவளர்ச்சியைத் தரவல்லது. வீதிகளில் எத்தனை பேர் தனிமையில் கதைக்கிறோம், சிரிக்கின்றோம் அப்படி யென்றால் நாங்கள் பைத்தியமா? இல்லை. ஒன்றில் ஊறிய பின் அதிலிருந்து மீள முடியாத நிலைதான் பைத்தியமாகும். எமது செயல்களை மீட்டுப்பார்க்கலாம். ஆனால் அதிலே நிலைப்பது தவிர்க்கப்பட வேண்டும். மற்றவர்களின் குற்றங்களை உற்றுக் கவனிக்கின்றோம். எங்களைப் பற்றி பார்வையை மழுங்கடிக்கின்றோம். நான் எது செய்தாலும் அதுதான் சரி.... ஆனால் மற்றவர்கள செய்கையிலே முரண்படுகின்றோம். எம்மைப் பற்றி நாம் வைத்திருக்கின்ற சிந்தனையும் மற்றவர் மட்டில் நாம் வைத்திருககின்ற அபிப்பிராயமும் ஒன்றாக இருக்க வேண்டும். அப்போது தான் ஒற்றுமை எம்மில் மலரும்.

திருந்துவதற்கு வழிவகுத்தல்

எனவே நான் என்ற சுய நலத்தை தவிர்த்து நாம் என்ற பொது நலத்தை வளர்ப்போம். அப்போது தான் வாழலாம், வாழவைக்கலாம். புரிந்துணர்வு அவசியம். ஒருவர் எம்முடன் முரண்படுகையில் .....

''எதற்காக முரண்படுகின்றார்? இவ்வாறு முரண்பட இவரைத் தூண்டியது என்ன? இவரினிடத்தில் நான் இருந்தால்எப்படிப்பேசுவேன்? அல்லது முரண்படுவேன்? என்பவற்றை யதார்த்தமாகச் சிந்தித்தால் எம்மை எதிர்க்கின்றவரின் உண்மை நிலையை நாம் அறிந்து கொள்ள முடியும். பகைவனிடத்தில் அனுதாபம் பிறக்கும். நாம் நல்லதைச் சொல்லுகின்ற, செய்கின்ற போது, அவரும தன்னிலையைத் தானாக உணரவும திருந்தவும் வழிவகுக்கின்றோம். ஒருவரைத் திருத்துவது என்பது எவராலும் முடியாத ஒன்று, அவராய்த் திருத்தினால் உண்டு. ஆனால் அவர் திருந்துவதற்காக - உணர்ந்து கொள்வதற்கான சூழ்நிலைகளைக் கொடுப்பதுதான் அவருடைய வாழ்வையும் நம்முடைய வாழ்வையும் மகிழ்ச்சிமிக்கதாய் மாற்றும். எனவே, ஒவ்வொருமனித முரண்பாடுகளிற்கும் சந்தர்ப்பம், சூழ் நிலையே காரணமாகின்றன. நானா இப்படிப் பேசினேன்? அல்லது செயல்பட்டேன்...? என்னையே என்னால் நம்ப முடியவில்லையே! என்ற சிந்தனை வரும் இடத்து சந்தர்ப்பம் சூழ்நிலை தான் எம்மை தவறச் செய்யத் தூண்டியிருக்கின்றது. நாம் நன்மை செய்ய ஆசைப்படுகின்றோம் அல்லது செயது கொண்டிருக்கின்றோம் எனில் எமக்குக் கிடைத்த, கிடைக்கப்போகும் சந்தர்ப்பத்தைப் பொறுத்தே ஆயினும், எதற்கும் வாய்ப்புக்கள் வருவதில்லை. நாம் தான் எதைத்தேட வேண்டும். உருவாக்கிக் கொள்ள வேண்டும், கிடைக்கின்றவாய்ப்புக்களில் எங்களை நாங்கள் வெளிப்படுத்துகின்றோம்! அல்லது வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் எம்மிடத்திதில் ஆளுமையும் பார்ப்பவற்றில் ஆரோக்கியத்தன்மையும் வெளிப்படும். பிரச்சினையில்லாத சமூகத்தில் நாம்வாழ் வதற்கு ஆசைப்படின்முதலில் நாம் பிரச்சினையில்லாதவர்களாக வாழ வேண்டும். சமாதானத்தை அடைய விரும்புகின்றேன் என்றால், நானும் சமாதானத்தைக் கொடுக்க முன்வர வேண்டும். நான் மற்றவர்களிடம் என்ன என்ன வெல்லாம் எதிர்பார்க்கின்றேனோ அவற்றை எல்லாம் மற்றவர்கட்குச் செய்யவேண்டும். இவ்வாறு செயற்படின் நான் எதிர்பார்ப்பதை விடவும் அதிகமாய் கிடைக்கும்.

பேராசைதான் பேரழிவு.

ஆசைதான் ஒருமனிதனை உயர்வடைய வைக்கின்றது. அவன் அத்தோடு திருப்திபட வேண்டும். அதைவிடுத்து அளவுக் கதிகமாய் திருப்தியேயின்றி ஆசைக்கு மேல் ஆசை எழுகின்ற பொழுது அழிவு தானாகவே வந்து விடும். துன்பங்கள எம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கும். எமது விருப்புக்கள் நிறைவேற வேண்டுமாகில் திருப்திப்பட வேண்டும். அளவுக்கதிகமான பேராசைகள் அழிவுகளையே விளைவிக்கும் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ''உன்னைப் போல உன் அயலானையும் நேசி, உன் பகைவனுக்க அன்பு காட்டு! உலக செல்வங்களில் அதிக நாட்டங் கொள்ளாதே'' (யேசு)என்று யேசுபிரான் தன் போதனைகளில் குறிப்பிட்டுள்ளார். எனவே, மீட்பின் பரம பிதாகாட்டிய வழியில் எம் இதயங்களைச் செலுத்தி அர்ப்பண வாழ்வு வாழ்வோம் பாவ இருள் சூழ்ந்த உலகை இதயத்து அன்பினால், இறை அருள் பெற்று மற்றவர் மட்டில் முன் மாதிரியாகத் திகழ்ந்து வாழ்வோம், வழிகாட்டுவோம்.

நியாப் திட்டத்தின் மூலம்

குடாநாட்டுக்கு கிடைக்கவிருந்த 400 மில்லியன் நாலில் ஒன்றாக குறையும் சாத்தியம்

சிலரின் தவறான அணுகுமுறையே இதற்குக் காரணம்:அரச அதிபர் கரும் கண்டனம்

(தென்மராட்சி)

நியாப் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வரவிருந்த 400 மில்லியன் ரூபா, மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு சிலரின் தவறான அணுகுமுறை களால் இப்போது 100 மில்லியன் ரூபாவாக குறையக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இருப்பினும் 400 மில்லியன் ரூபாவை எமது மாவட்டம் இழக்கின்றது என்பது பற்றி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக்குழுவில் இருக்கும் யாருமே குரலெழுப்பாதது வேதனைக்குரியது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கடந்த வெள்ளியன்று யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நியாப்திட்டம் பற்றிக் குறிப்பிடும் போது தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு விவசாய, கமநல சேவைகள்திணைக்களங்களின உயர் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் திட்ட மிடல் பிரதிப்பணிப்பாளர் என். சிவபாதசுந்தரம், மேலதிக அரசஅதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாய கம் போல் உட்பட வேறுபலரும் சமுகம் அளித்திருந்தனர்.

அரசாங்க அதிபர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,நியாப் திட்டத்தில் இடையூறுகள் ஏற்படாமல் இருந்திருப்பின் எமது மாவட்டம் பல நன்மைகளைஅடைந்திருக்கும். ஆனால், இத்திட்டம் பற்றிய தவறான கருத்துக்களும், விளக்கங்களும் ஏற்பட்டமையினால் பல தடங்கல்கள் ஏற்பட்டு திட்டம் பின்னடைவை அடைந்துள்ளது.

இந்த நிலையைப் பற்றி யாதுமே குரல் எழுப்பாமை ஆச்சரி யத்திற்குரியதாகும். மேலும், மாவட்டத்தின் விவசாயம் தொடர்பான தீர்மானங்களை விவசாய ஒருங்கிணைப்புக்குழுவில் எடுக்க வேண்டும். பின்னர் அவற்றினை அமுல் செய்ய வேணடும்.

விவசாயத்துறை தொடர்பான புள்ளி விபரங்களை சமர்ப்பிப்பதால் விவசாயிகள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தீர்ந்து விடப் போவதில்லை. விவசாயிகளின் பிரச்சினைகளை எவ்வாறு இலகுவில தீர்த்துக் கொள்ளலாம் என விவசாய அதிகாரிகள் பொறுப் புணர்வுடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும் எனக் குறிப் பிட்டார். (உ-77)

குருநகர் மீனவர்கள் மன்னாரில் தொழில் செய்ய அனுமதி

(தென்மராட்சி)

குருநகர்ப் பகுதி மீனவர்கள் மன்னார் மாவட்டத்திற்குச் சென்று மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை அப்பகுதி மீனவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

குருநகர்ப் பகுதி மீனவர்கள் கடற்கரையில் இருந்து 5 மைல்களுக்கு அப்பாலேயே நமது தொழிலை மேற்கொள்ள வேண்டும்.

மன்னார் மாவட்டக் கடற்பரப்பில் பிடிக்கும் மீன்களை அம்மாவட்டத்திலேயே சந்தைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இந்த அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குருநகர்ப் பகுதி மீனவர்கள் இதற்கான அனுமதியைப் பெற்றுத் தரும்படி யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொண்டமையினாலேயே இவ் ஏற்பாட்டினை அரச அதிபர் மேற்கொண்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (உ-77)

காவலூருக்கான தொ.தொ.சேவையை சீராக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைக்கான தொலைத் தொடர்புச் சேவையை சீராக்கித் தருமாறு கோரி, அப்பகுதி தொலைத் தொடர்பக உரிமையாளர்கள் கையொப்பமிட்டு, யாழ். ரெலிகொம் பிராந்திய முகாமையாளர் எஸ். சரவணபவனுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். (உ)

ஓய்வூதியர்களுக்கு புகையிரத ஆணைச்சீட்டு

(சுதுமலை)

உள்ளூராட்சி மன்றங்களில் கடமைபுரிந்து மாகாண அரசாங்க சேவைக்கு இணைப்புச் செய்யப்பட்டபின்னர் அரசாங்க ஓய்வூதியப் பிரமாணங்களுக்கமைவாக ஓய்வு பெற்ற சகலரும் இலவச புகையிரத ஆணைச்சீட்டுக்களை ஓய்வூதியம் வழங்கப்படும் பிரதேச செயலகத்திலேயே பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை, மாகாணசபைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு முன்னர், உள்ளூராட்சி சேவையிலிருந்து ஓய்வு பெற்ற சகல உளளூராட்சி அலுவலர்களும் தாம்கடைசி யாகக்கடமைபுரிந்த உள்ளூராட்சி மன்ற அலுவலகத்திலேயே புகையிரத ஆணைச்சீட்டுக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளுமாறும் வடக்கு கிழக்கு மாகாண உளளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ-252)

தினசரி தியானம்

வாழ்க்கைத் தத்துவம்

தன்னலமற்ற சேவைதான், வாழக்கைக்குச் சுவையூட்டும் உப்பு.அண்டசராசரத்தை நேசித்தலே வாழ்க்கைக்கு உணவு. தூய்மையே வாழ்க்கைக்கு நீர்.வாழ்க்கைக்கு இனிமை சேர்ப்பது பக்தி.மணம் தருவது பெருந்தன்மை.வாழ்க்கையின் இயக்கத்துக்கு மையமாக இருப்பது தியானமே.இறைவனை உணர்தலே வாழ்க்கையின் இலக்கு.ஆகவே, தொண்டு செய்யுங்கள்-நேசியுங்கள்-தூய்மையாயிருங்கள்-பெருந்தன்மையுடன் இருங்கள்- தியானியுங்கள்- உணருங்கள்.

சுவாமி சிவானந்தர்

விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவையின் சமூக சேவை உத்தியோகத்தர்,கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிப்போர்க்கான கல்வித்தகைமையும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியும், ஒரே அமர்வில் 5 பாடங்களுக்கு குறையாத சித்தியும், கொண்டு தமிழ்/எண்கணிதம்/பிரயோக கணிதம்/கணிதம்/வர்த்தக கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் அவசியம்.

விண்ணப்ப படிவங்களை வே.பொ.பாலசிங்கம், செயலாளர் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்குக் கிழக்கு மாகாணம், திருகோணமலை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தாயுடன்...

மதிக்கப்பட்டவராவர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

பிரஸ்தாப இளைஞன் சம்பவ தினத்தன்று தனது தங்கை பாடசாலைக்குச் செல்ல மறுத்ததனால் அவரைப் பேசியதுடன் அடித்துள்ளார்.

இதனைப் பொறுகாத தாய் மகனைப் பேசினார். இதனால் விரக்தியடைந்த மகன் தற்கொலை செய்யும் நோக்கில் சுருக்கு மாட்டி தொங்கியுள்ளார். இதனைத் தற்செயலாக அவதானித்த இளைஞனின் தந்தை தொங்கிய கயிற்றை அறுத்து ஆபத்திலிருந்து மீட்டுள்ளார். (இ-7)

44 தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

களனி ரயர் தொழிற்சாலையில் பணியாற்றும் 44 தொழிலாளர்கள் இரசாயன ரீதியான தாக்கத்துக்கு உட்பட்டு,நோய்வாய்ப்பட்டிருப்பதாக கம்பஹா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தொழிலாளர்கள் அனைவரும் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுள்ளனர். (இ)

மொறட்டுவ பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளது

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக் கழகம் அதன் கல்வி நடவடிக்கைகளை சில நாட்களுக்கு இடை நிறுத்தியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதையடுத்தே பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளது.

காய்ச்சலுக்கு உள்ளான 50 மாணவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது அண்மையில் தென் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று வந்த மாணவர்களுக்கு இந்த வைரஸ் காய்ச்சல் தொற்றியுள்ளதாகத் தெரியவருகின்றது. (ச)

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இடம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இது வரை காலமும் இல.107, கண்டி வீதி, சுண்டுக்குளியில் இயங்கி வந்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இம்மாதம் முதல் நல்லூர் இந்து விடுதிக் கட்டடத்தில் இயங்கவுள்ளதாக யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் தெரிவித்துள்ளார். (உ)

உடுப்பிட்டியில் படை முகாம்

(திருநெல்வேலி)

வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் இராணுவத்தினர் புதிய படை முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் நேற்று முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

படை முகாம் அமைக்கப்பட்டு வருவதையடுத்து அப்பகுதிக்கு பெருமளவான முட்கம்பிகளும்,மரக் குற்றிகளும் கொண்டு வந்து குவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி பகுதியில் கடற்புலிகளின் கடற் புறா படையணியின் தளம் ஏற்கனவே இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

தமிழ் மக்களின்...

சோதனைக் கெடுபிடிகள் லஞ்சம் கொடுக்கவேண்டியுள்ளதாலும் ,விவசாயத்தை அடிப்படைப் பொருளாதாரமாகக் கொண்ட லட்சக்கணக்கான மக்களின் விவசாய நிலங்களில் இராணுவம் முகாம் இட்டிருப்பதாலும் பல நூற்றுக் கணக்கான தொழிற்சாலைகள் நிறுவனங்களில் இராணுவம் குடியிருப்பதாலும் அம்மக்களது தொழில் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறத்தக்க வகையில் எமது பிரதேசத்தில் குடி கொண்டுள்ள இராணுவம் எமது வீடுகள் தொழில் நிலங்களில் இருந்து வெளியேற வேண்டும் என ஒருமித்த குரலில் உலகிற்கும்,சிங்கள தேசத்திற்கும் உரத்துக் கூறுவதற்காக அணிதிரள்வோம்.

இதனூடாகப் பேச்சுவார்த்தையில் இருந்து விலகுவதாகப் புலிகள் எடுத்த முடிவு தன்னிச்சையானது என்றும் இராணுவம் தமிழ் மக்களது வீடுகளில் இருப்பதனை மக்கள் ஆட்சேபிக்கவில்லை என்றும் இராணுவம் யாழ்ப்பாணத்தில் குடி கொண்டு இருப்பதையே மக்கள் விரும்புகிறார்கள் என்றும் மக்களது விருப்பத்திற்கு மாறாக தம் இஷ்டப்படி கருத்துக்களைக் கூறும் அல்லது தமிழ் மக்கள் மீது கருத்துக்களைத் திணிக்க முயலும் உலக வல்லரசுகள் உள்ளிட்ட சில சக்திகளுக்கும் தென் பகுதியில் உள்ள சிங்களச் சகோதரர்களுக்கும் இம் மக்கள் எழுச்சியின் ஊடாக தமிழ் மக்களின் உண்மையான எண்ணங்களையும்,விருப்பங்களையும் ஒரணியில் ஒரே குரலில் உரத்துச் சொல்வதன் மூலம் எமது ஒற்றுமையையும்,பலத்தையும் வெளிப்படுத்தி எமது உரிமைகளையும்,சுதந்திரத்தையும் வென்றெடுப்போம்.அதற்காக அணிதிரள்வோம்.

இந்த எழுச்சி நிகழ்வு தொடர்பாக மக்களிடையே சென்று உரையாடி அவர்களது பிரச்சினைகளையும், விருப்பங்களையும் அறிவதற்காக பல்கலைக்கழக மாண வர்கள் மக்களது வீடுகள், பாட சாலைகள், பொது நிறுவனங் கள் வரத் தொடங்கியுள்ளனர்.மக்க ளிடம் இருந்து பெறப்படும் கருத்துக்களுடன ஒவ்வொரு நாளும் மாலை 5.30 மணிக்கு பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடும் மாணவர்கள் தமக்குள் உரையாடி சந்தேகங்களைத் தீர்த்துக கொள்வதுடன் மக்களையும் தெளிவு படுத்தி வருகின்றனர். மாலையில் இடம் பெறும் கேள்வி பதில் அரங்கத்தில் ஆர்வமுள்ள எவரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

போராளிஉயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிணற்றில் தவறி வீழ்ந்ததில் போராளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த வீரவேங்கை கனிமொழி(விக்னேஸ்வரன் விஜிதா) என்ற போராளியே உயிரிழந்தவராவார். (ந)

மத்தியகுழு..

யுள்ள வீ.ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பம் முதல் தான் கூட்டணியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட விதம் கூட்டணியில் இருந்தவர்கள் எல்லோரும் வெளிநாடுகளுக்கு ஓடித்தப்பித்த காலத்தில் இருந்து தான் கட்சியைப் பாதுகாத்த விதம் தொடர்பாகவும் அவர் விளக்கியுள்ளார்.

இதேவேளை,தமிழர் விடுதலைக் கூட்டணியின் 36 மத்திய குழு உறுப்பினர்களில் 30 உறுப்பினர்கள் கடிதம் கிடைத்தவுடன் ஆனந்தசங்கரியைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்துக் கொண்டதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத மத்திய குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளதாகவும் கொழும்பில் உள்ள கூட்டணி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (வ)

வடமராட்சி...

சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்தினா கருத்துத் தெரிவிக்கையில் கடற் கொந்தளிப்புக் காரணமாக இவர்கள் காணாமல் போய் இருப்பதாகவும் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்வதாகவும் தெரிவித்தார்.

இதேநேரம் மண்டைதீவுக் கடற்கரை ஓரமாக உருக்குலைந்த நிலையில் இரு சடலங்கள் கரை ஒதுங்கி இருப்பதாகவும் அடையாளம் காண முடியாத இந்த இரண்டு சடலங்களும் ஊர்காவற்துறைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (ந-3)

அ.அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த யோகராசா நந்தரூபன் என்பவரது தேசிய அடையாள அட்டையும், விஷேட அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.உரியவர் நேரில் வந்து காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். (இ-3)

புதிய...

தொடர்பாக எதனையும் விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டாமையால் அம்மாநாட்டில் விடுதலைப்புலிகளை கலந்துகொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கையில மாற்றுயோசனை ஒன்றைத் தயாரித்து இன்னமும் இரண்டொரு தினங்களில் விடுதலைப் புலிகளுக்கு பிரதமர் அனுப்பிவைப்பார என்றும்தெரியவருகிறது. (ம)

வெட்டுக்...

சந்தேகம் கொண்ட உறவினர்கள் இது தொடர்பாக கோப்பாய்ப் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் நேற்று மாலை 6மணியளவில் கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டதுடன் அவரது எம்.ரி.90 மோட்டார் சைக்கிளையும் கிணற்றிலிருந்து வெளியே எடுத்தனர்.

சடலத்தின் முகத்தில் ஆழமான இரண்டு வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. யாழ்மாவட்ட பதில் நீதிவான் திருநாவுக்கரசு சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணையை மேற்கொண்டதுடன், சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் நேற்றிரவு 8 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது. (த-239,79,61)

வேலையாள்கள் தேவை

1. உணவு பரிமாறுவோர் (சப்ளையர்ஸ்)
2. சமையல் வேலையாள்கள்.
3. இடியப்ப வேலையாள்கள்.
4. சமையல் உதவியாளர்கள்.
5. ரீ மேக்கர்.
6. உழுந்து அரைப்பவர்கள்.
7. பாதுகாப்பு உத்தியோகத்தர்.

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு வேலை ஆள்கள் தேவை. தகுதி உடையோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப் படும். தங்குமிட வசதி செய்துதரப்படும்.

36, 38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் (C/6247)

ரெலிபோன்: 021 222 2373
0777 146844

இறை அனுபவம் பெற மீண்டும் ஓர் அழைப்பு

இந்தியா போட்டா ஆச்சிரம இறை, தியான இல்லத்திலிருந்து வருகை தரும்

அருட் தந்தை சேவியர் அருள்ராஜ்

அவர்களால் நடத்தப்படும்

இறை தியான வழிபாடுகள்

- ஜுன் 5,6,7ம் திகதிகளில் காலை 9.30 - 1மணிவரை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்
- ஜுன் 7 - இரவு முதல் அதிகாலை வரை புனித மாட்டினார் குரு மடத்தில்

தூய ஆவி திருவிழிப்பு

- ஜுன் 14,15 - மாட்டினார் குருமடத்தில் - குருத்துவ மாணவர்களுக்கு
- ஜுன் 16,17,18,19ம் திகதிகளில் ஆயர் இல்லத்தில் - குருக்கள், துறவிகளுக்கு, கன்னியர்களுக்கு
- ஜுன் 20,21,22ம் திகதிகளில் - நெடுந்தீவு
- ஜுன் 23,24,25 - கிளி.முல்லை மறைக்கோட்டத்தில்
- பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய நவநாள் மறையுரைகளும் மேற்படி குருவானவரால் நிகழ்த்தப்படும்.
- இவை தவிர இளைஞர், பெற்றோர், சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்வுகள்

"தூய ஆவியின் செயற்பாட்டை அணைக்கவேண்டாம்"

ஆயர் இல்லம் (C 6244) இறை தியான குழுவினர்



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.